உ.

ஓம்

ஸ்ரீ சற்குருதேவநம:

# வேதாந்த லக்ஷணத்திரைய விளக்கம்.

இது,

திருத்துருத்தி,

இந்திர பீடம்

கரபாத்திர ஸ்வாமிகளாதீன

பரம்பரை.

ஸ்ரீலஸ்ரீ. இராமையதேசிகஸ்வாமிகளின்,

மாணாக்கருள் ஒருவராகிய

தென்காசித் தாலுக்கா

மேலப்பாவூர்,

பா. மு. நாராயணஸ்வாமி நாயுடு

அவர்களால்.

இயற்றப்பட்டு,

விருதுப்பட்டி

லிங்கக் குருக்கள் அவர்களால்,

சென்னை

ட்சுமி விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

உ

ஓம்

ஸ்ரீ சற்குருவே நம:

# வேதாந்த லக்ஷணத்திரைய விளக்கம்.

உஃது,

திருத்துருத்தி,

இந்திர பீடம்

கரபாத்திர ஸ்வாமிகளாதீன

பரம்பரை,

ஸ்ரீலஸ்ரீ. இராமைய தேசிக ஸ்வாமிகளின்,

மாணாக்கருள் ஒருவராகிய

தென்காசித் தாலுக்கா

மேலப்பாவூர்,

பா. மு. நாராயணஸ்வாமி நாயுடு

அவர்களால்.

இயற்றப்பட்டு,

விருதுப்பட்டி

இராமலிங்கக் குருக்கள் அவர்களால்,

சென்னை

மஹாலட்சுமி விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

# சாற்றுக்கவிகள்.

சென்னை
ஸ்ரீமான். மணிமங்கலம்.
திருவேங்கடமுதலியா ரவர்களால்
இயற்றப்பட்டது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

சீர்வளர் மறைமுடிச் செம்பொரு ளுணர்தரப்
பேர்வளர் மாயைப் பவமதி னகல்வுறு
நசைவளர் மனத்தின் மாந்தர்க் கிகல்விளை
வசைவள ரான்ம பிரமபே தத்தினை
யழிதரற் கிடரா மவ்வயி னசற்றிக்
குருமொழி மாவாக் கியமதின் றத்துவ
மியலிரு பதங்களு மொன்றென வாக்கிடு
மப்பத மொப்பி லசிபத நீயெனுக்
கரதல மணிபோற் காட்டிடு மிலக்கணை
யொருமூன் றாயின விட்டதும் விடாததூஉம்
விட்டும் விடாதெனு மிவைதம் போதக
மியம்பிடு நூலொன் றியற்றினன் பாகை
நாராயண சாமி நாவல னிராமைய
தேசிகச் சுவாமிக டண்ணரு ளாழி
மூழ்கிவே தாந்த லக்ஷணத் திரைய
விளக்க, மென் றிதனை விளைந்தே யுலகீர் !
போற்றுமி னின்றே!! போற்றுமி னன்றே!!!
களக்கமின் முத்திக் கரைபுரள் வீரே.

இந்நூலாசிரியரது ஆசிரியராகிய
திருவொற்றியூர்
ஸ்ரீமான். இராமையதேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டது.

---

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலக்கமுற் றுழலு மானிடர் பவத்தின்
கடல்கடந் துய்யுமா றுணர்ந்திக்
கலக்கணத் தொளிறும் பரம்பொருள் விளங்க
வனுபவ மாகவே சாந்த
விலக்கணத் திரைய விளக்கமென் றொருநூ
லியற்றினன் பாகைமா நகர்வாழ்
நலத்தகு சீர்நா ராயண சாமி
நாவல னெனுந் தவத்தோனே.

---

இந்நூலாசிரியரது சிறிய தந்தையாகிய
தென் காசித் தாலூகா, மேலப்பாவூர் பென்ஷன்
ஸ்டேசனுபீசர்
ம-ா-ா-ஸ்ரீ. கோபால்நாயுடவர்களால்
இயற்றப்பட்டது.

---

அறிவுடை யொருவன் றேன்றிய குடியி
லாறெழெண் டலைமுறை நரகிற்
குறுபவ ரில்லை யெனுமுது மொழியி
னுறுதியா யெங்குடி யதனிற்
செறியுநற் குணமே வாய்ந்துபல் கலையுந்
தேர்ந்துபூ மகள்கலை மகட்கு
நறும்பொருட் டாய்த்தன் னிலிடங் கொடுத்து
நகுந்தனைத் தானெனக் கண்டு. (1)

கண்டவா நந்தப் பெருக்கமை யாது
கரைகடந் திழிந்ததா மென்ன
திண்டிறல் சயட்டி வியட்டியு மவத்தாத்
திரையமு நீங்கிப்பி னின்ற
தெண்டரு மறைநூன் முடிபை லக்கணத்தின்
றிரையநல் விளக்கமென் றேர்நூல்
விண்டன னாரா யணசுவா மிப்பேர்
விவேகனுய்த் தோன்றிய தோன்றல். (2)

---

சாத்தூர் போலீஸ் இனிஸ்பெக்டர்

## ம-ள-ள-ஸ்ரீ. B. B. நாராயணசுவாமி நாயுடு

அவர்களா லியற்றப்பட்டது.

---

நேரிசைவெண்பா.

வேதாந்த லக்ஷணத்தின் றிரய விளக்கநூல்
வேதாந்தம் பம்மகல வேற்றினவே—வேதாந்த
நாரா யணமோங்கு நன்பாகை நாயகனன்
நாரா யணசாமி நா.

---

பாளையங் கோட்டை புதுப்பபடைத் தெரு

## V. சண்முகம்பிள்ளையவர்களா லியற்றியது.

ஏதாந்த விலக்கணத்தி னியல்பறியா
ரெளிதோர்ந்தே யிதயத்துள்ளிப்
போதாந்த பூரணமாய்ப் புகலரிய
சுபாவநிலை பொருந்தி வாழ்வான்
வேதாந்த விலக்கணத்தின் றிரயமென
வோர்மணியை வெளியிட் டானல்

நாதாந்த நெறிபயின்ற நண்பனுரா
யணஸ்வாமி நாவல் லோனே.
அண்டத்தி னளவறிவா ரதற்குளுள
வுயிர்த்தொகுதி யாவுந் தேர்வார்
பிண்டத்தின் பேதமுதற் பெரும்பூதப்
பெயர்ச்சியொடு தொடர்ச்சி தொந்தம்
பண்டத்தின் பல்வியக்கப் பண்புணர்வார்
பரமார்த்தம் பார்க்கப் பாரார்
கண்டத்தி னுபேயைக் காரணமென்றே
தின்னூல் காண்பார் யாரே.

---

ஸ்ரீலஸ்ரீ. வள்ளிநாயக ஸ்வாமிகளால்
இயற்றப்பட்டது.

## அகவல்.

பூவுல கதனின் மேவு மாந்தருட்
பிறப் பிறப்பென்னு மறப் பெருத்துன்ப
மெய்தியு ழன்று மைசேர் வாழ்க்கை
பொய்யெனத் தேறி மெய்யினை நாடி
தலையெரி பற்றி யுலைவுறு நெஞ்சின
னென்ன வாடிப் பண்ணிய சாதனம்
நான்கும் கைவரக் கோன்பெருங் கருணை
யுற்றோர் தமக்கு வற்று வூற்றெழா
தேனுறு சுவைபினுங் கானுறு கனியினுந்
தித்தித் துடலைத் தொத்தும் பல்பிணி
முதலா யன்றமூ விதமாம் தாபம்
போக்கி யெல்லா மாக்கி யாளும்
பொருளா யென்று மருளார் மனத்திற்

கெட்டா வொன்றாய்த் தட்டா வின்ப
வாரியாத் தன்னுட் பேரிய லண்டம்
யாவுந் தோன்று மோவியப் படமா
யென்பு நெக்குருகி யன்புறு மாந்த
ரிதயா காயம் பதியா யுறையு
மோனமா யென்று மோனம் விடாதார்
பானமாக் கரண பானஞ் செய்வார்
நனிநகர் வாழினு மினிதவர்க் காகி
விருத்திக் கென்று மருத்தி செய்து
கானத் துறையு மூனமாக் கட்
கரிய பொருளாப் பிரிவற் றெங்கு
மொளிரும் வத்துவை யளவி லறிவா
லுள்ளங் கையுறை தெள்ளிய நெல்லியங்
கனியெனக் காட்டி நனியுயர் வீடாஞ்
சாகரஞ் சேர்க்கு மோகமில் நெறியாங்
கங்கையோ வவர்க்கு மங்கல நாணிட
நாயகற் கொணரு மேயநற் றோழியோ
பவக்கடல் கடத்து நவையி லுவாயோ
என்ன வறிஞர் பன்னு டுதிக்கக்
கெண்டைபாய் வயலில் நண்டுகளிவர
மெய்தும் பாவூர் செய்த தவத்தா
லங்குதித் தெங்கு மங்காப் புகழ்விரித்
திங்கங் கென்னு தெங்கு மாகி
யொழிவற நிறைந்த யழிவிற் பொருளைத்
தானுக் கண்டு மானுர் விழியார்
மண்பொன் மேலிறை நண்பு மின்றி
யுச்சித மான சச்சிதா னந்த
வாழ்வின் மிளிருந் தாழ்வி லிராமய

தேசிக னருள் பெற் றுசில்வீ டெய்திய
நித்ய திருப்தனு சத்ய மெய்யனு
யாவரும் போற்றுந் தாவில் சீர்பெற்ற
நாரா யணசா மிப்பேர் நாவலன்
வேதாந்த லக்ஷணத் திரய விளக்கம்
என்னு நூலை மன்னு புவியி
லியற்றின னருளால் மயற்றிரை யொழியவே.

---

விருது பட்டி
ம-ா-ா-ஸ்ரீ இராமலிங்ககுருக்க ளவர்க
ளியற்றியது.

---

வேதாந்த லட்சணத்தின் றிரையவிளக்
கத்தைவியன் றமிழினுலே
போதாந்தப் புண்ணியருங் கேட்டுவப் பச்சொற்றான்
பொன்பதி போலோங்குந்
தாதார்ந்த சோலைப்பாவூர் நாராயணசாமித்
தமிழ்ப் பாவாணன்
காதார்ந்த கண்ணியர்கள் மயலவித்தஞ் ஞானவிருள்
கடிந்தோன் மன்னோ.

---

திரிசிரபுரம் வித்வானும்
விருதுபட்டி றெயில்வே ஸ்டேசன் மாஸ்டருமாகிய,

ம-ா-ா-ஸ்ரீ

தி. ராஜகாத்தபபெருமாள் பிள்ளை யவர்கள்
செய்தது.

---

மேதினியில் வேதாந்த லட்சணத்தின் றிறைய
விளக்கத்தை மேலோ
ரோதியுணர்ந் துலகினிடைப் பிறவாதமுத்திநெறி
யுறுதற் காக
பாதிவிய மாய்த்தமிழிற் சொற்றனன் பாலூர்ப்பதிக்கு
மருடம் போல்வான்
நீதியின் மன்னரெலாம் புகழ் நாராயணசாமி
நிபுணன் மாதோ.

சாற்றுக்கவிகள் முற்றும்.

---

உ

ஓம்

ஸ்ரீசற்குருவே நம:

# வேதாந்த லக்ஷணத் திணாயவிளக்கம்.

## பாயிரம்.

### சொரூப வணக்கம்.

திருமருவுஞ் சத்தியசிற் சுககனமாய் நிறைந்தநிர
திசய வாழ்வை
யருமறையின் முடிப்பொருளா யமர்ந்தடிய ரகத்திற்
யறிவாஞ் சோதி [சே
யுருவமதா யருவமதா யொளிர்வானை யுள்ளன்பா
லுருகு வோர்க்கே
கருவளர்வெங் கட்டறுப்பான் கழலிணையை யெஞ்ஞா
கருத்தில் வைப்பாம் [ன்றுங் க

மனநினைவு மறதியுமற் றுபசாந்த மயமான
மாயா தீதக்
கனநிலையைக் கற்பனைசற் றேனுமில்லாக்க திரொளி
கண்ட தொண்டர் [யைக்
சினமகற்றித் தானாக வொளிர்விக்கு மறிவுருவாஞ்
சின்மயத்தைத்
தினந்தினமும் பணிந்து செனனாதிபிணி செகுத்திடவே
சிந்தை செய்வாம். உ

## அடியார் வணக்கம்.

அறிவையன்றி யானந்த மானந்த மின்றிநனி
யறிவில் லென்றே
யுறுதாதான் மியமடைந்த வுத்தமர்த முபயபத
முறுதி யாகப்
பெறுதற்கே யுளமுள பூசனையியற்றக் கரங்களுள
பேசத் தானே.
திறமான வாக்குளமுன் வணங்கிடநற் சிரமுளவிச்
சிறிய னேற்கே, ௩

## குருவணக்கம்.

பூரணமே வடிவாகிப் புனிதமாகிப் புண்ணியபாவங்கள்
பொலியா தாகி [சற்றும்
யாரணமே தேடுகின்ற வதீதமாகி யன்பாகி யறிவாகி
யகண்ட மாகித்
தாரணியில் வெளியாகி யொளிருகின்ற சற்குருவாமி
சிகன்றன் றாளைக் [ராமயதே
காரணமே யெனப்பணிந்தேன் கவலைதீர்ந்தேன்
கருத்தினும் வாக்கினுநிறைந்தே காப்பன் மாதோ.

## நூற்பெயர்.

அடிநடுவு மந்தமில்லா வகண்டமதை யறிவிக்கு
மாரணத்தின்
முடிப்பொருளை மூன்றுவித விலக்கணத்தான் மொழி
மொழிந்த நூலை [யாது
வடிவொடுவந் தாண்டருளிராமயதேசி கனன்பென்
வாக்கி னின்று
படிமிசைவே தாந்தலட்சணத்திரைய விளக்கமெனப்
பகர்ந்த தம்மா. ௫

விஷயம். சம்பந்தம். பிரயோசனம். அதிகாரி.

சிற்றறி வதனைச் சின்மய வடிவாய்த் திகழ்த்துவ
தே யிதன்விடயங், குற்றமில் வேத முடிவுபநிடதங்
கூறுஞ்சா ரத்தின்சம் பந்த,முற்றதோர் துயரை யகற்றி
யா னந்த முறுதலே யிதன்பய னாகும்,பற்றுசா தனைநா
ன் கடைந்தபக் குவரே பகருமின்னூற்குரி யவரோ. ௬

## அவையடக்கம்.

தன்னையே யுணர்ந்து தற்பர மானோர்
சாற்றின ரனந்தநூ லதுபோ
லென்னையே யானு முணர்ந்தவன் போல
வெடுத்துரை செய்தறி யாமை
தன்னையே வெளிப டாக்கினே னெனினுந்
தக்கவர் மறைமுடிப் பொருளென்
றுன்னியே யுவப்போ டுறுவரெல் லாம
லுறுதியாம் பொருளிதென் றறிந்தே. ௭

---

பாயிர முற்றும்.

---

நூல்.

# அதத்துவா விருத்திப் படலம்.

பூருவ புண்ணியத்தான் மாணவனுக்குச் சாதன சதுஷ்டயமுதிக்கப் பிறவித் துன்பத்தைக் கண்டுளம் நடுங்கி வருந்தி யழுங்கல்.

மதிதனின் மிகுந்த மாணவ னொருவன்
மகிழ்வுட னனந்தசென் மத்தில்
விதிதவறாது செய்தநிஷ் காம
மிகுதியாம் புண்ணிய வசததாற்
கதிதனை யடைய வேண்டியே யுலகைக்
கானனீர் போலெனக் கழைந்து
நிதியதாம் பொன்மண் பெண்மக வாசை
நிசிதமென் றோர்ந்துநீக்கினனே. அ

அன்பருந் தந்தை தாய்சகோ தரரு
மடுத்துறுஞ் சுற்றமு நகருந்
துன்பமென் றுணரா தின்பமே யென்னத்
தோய்ந்தன னெடியநா ளதனால்
வன்பவம் வளர்ந்து வளர்ந்துமே னலிந்து
வாடினே னிவையினை விடுத்தேன்
பின்பெவை தம்மைப் பொருளெனப் போற்றிப்
பெறுவனு னென்றுதா பித்தான். கூ

## ஆசிரியனைத்தேட விழைதல்.

நானெனை லிபாதோ நசிப்புறு முலக
நலமெனக் கொள்வ தேதோ

வினவெம் பவங்க ளெஃதினல் வந்திங்
கிசைந்ததோ வினவதனை மாற்றி
மோஹமா ஞானமுத்திவீ டதனை
மொழிந்தருள் குருபரன் றன்னை
நானெவண் கண்டு வினவுவே னென்ன
நடுக்கமே கொண்டன னுளத்தில். ௰

நடுக்கமே கொண்டு நற்குரு பரனை
நாடியே நந்தன வனமு
மடக்கமாம் பாழ தானகோ விலிலு
மடர்ந்துழு நகரினும் வனத்து
மொடுக்கமா நாகமுழையினுந் தீர்த்தத்
துறையினு மோடியுந் தேடி
யடுக்கநான் காணே னையனே யென்னை
யாள்பவ ரெங்ஙனே வறியேன். ௰௧

## ஆசிரியரைக்காணுமையா லுண்ணைதல்.

பூரண னென்ன மறையெலா மார்ப்பப்
புனிதனே யிங்ஙன மறைந்த
காரண மறியேன் கர்த்தனே யென்பாற்
கனியுநல் லன்பிலை யென்றோ
வாரணப் பொருளா மறிவொளி யடைந்த
வடியவர்க் கடிமை சற்றின்றோ
தாரண சொருபா தமியனை யாளத்
தருணமீ திலையென மதித்தோ. ௰௨

பற்றெலா முடைய பாவியே னென்றோ
பாதகர்க் குரியனின் றென்றோ
நற்றவஞ் சிறிதுஞ் செய்திலை னென்றோ

நான்மறைப் பொருளதா நூலைக்
கற்றிலே னென்றோ வறிவினை மறந்த
கடையரா னாடோறு மருவி
யுற்றவ னென்றோ வுறுதிசற் றேனு
முளத்திலா வஞ்சக னென்றோ. ௰௩

சொல்வதைப் போல நடப்பதில் லென்றோ
சோம்பலே யுற்றவ னென்றோ
பல்வகை வாஞ்சை படைத்தவ னென்றோ
படித்ததை யயர்வற மனத்திற்
புல்வதின் றென்றோ புகழையே நாடிப்
போதுபோக் கிடுபவ னென்றோ
நல்வச னத்தோ டென்னெதிர் காண
நாதனே தருணம்வாய்ந் திலையோ. ௰௪

பகர்வதை யேற்கும் பருவமில் லென்றோ
பாவுநற் குணங்களின் றென்றோ
நுகர்வதைப் பொருளென் றுழல்பவ னென்றோ
நுண்ணிய விவேகமில் லென்றோ
நிகரிலா வுளத்தி லூக்கமில் லென்றோ
நீயெனை யகற்றினை யந்தோ
பகவனே யெனவும் பரிதவித் தழுது
பதைத்தனன் றேடன்மே யினனால். ௰௫

சரியையாரியனை யெதிருற அவன் போதித்தலு மறுத்தலும்

எகினன் புறத்திற் சரிதையா ரியனங்
கொருவனை யெதிர்ந்தன னன்னோன்
யூகிநீ வந்த வாறெமக் குரைசெ
பென்னலு முளத்தினிற் றுப

மாகினேன் பிறப்போ டிறப்புறும் பீதி
யடைந்ததா லகற்றிட வேண்டிச்
சோகியாம் ஞான குருவினைத் தேடிச்
சோகமே கொண்டன னென்றான். ௰௬

அங்கவன் மொழிவா றாலையத் தீச
னமர்ந்தனன் சென்றுநீ யடையில்
புங்கவன் றாப மகற்றுமென் றுரைக்கப்
புனிதனே வெங்கணு முளனென்
றெங்கணன் மறைக ளொழிவற விளம்பு
மிதையுணர்ந் திலையடை வானைத்
தங்கிகின் றடையு நெறியருள் புரிவோன்
றாபமீங் ககற்று முத்தமனே. ௰௭

கிரியையாரிய னெதிருறல்.

என்றலு மிதனுண் பொருளுணர்ந் திலனியா
னெந்தையே விவேகிநீ யென்றே
சென்றனன் சரிதை யாரிய னதன்பின்
றெளிவுறு மாணவ னுசாவி
நின்றன னாங்கு கிரியையா ரியனு
நேர்தலா லிவணநீ வாடி
யொன்றியே நிற்ப தெஃதினா லென்ன
வோதுவ னறிவுடை யோனே. ௧௮

நானெனும் பொருளீ தெனவறி யாது
நலிவதான் மாயையே விட்டே
யூனெனு முடலம் வந்துவந் துற்ற
வொழிபின் னுளத்தயர் வடைந்தே
யீனமாந் துயர வடிவமே யானே
னிதுதனை யிகுத்திட வேண்டி

ஞானவா சிரியன் றன்னையே தேடி
நாடினே னென்னனு மன்னன். ௰௬

கிரியையாரியன் போதனையுமதனை மறுத்தலும்.

மானமே மயமா மந்திர வடிவ
மகிபனு மீசனை யெழுத்தா
லூனமே சற்று மிலாதயங் கிரத்தி
லுறவமைத் தருச்சனை புரியி
லீனமதாகுந் துயரெலா மென்ன
வியம்புவன் மாணனு மினியன்
றூனமும் வடிவு மிலாதவ னென்னச்
சாற்றிடுஞ் சதுர்மறை தனித்தே. ௨௰

அன்னவ னவசலனை யன்போ
டருச்சனை புரிபவன் றன்னை
யுன்னுதல் பூசை யென்றுநீ யுளத்தி
லுணர்ந்திலை மறந்தவுன் னறிவை
யென்னவென் றுரைப்பே னெந்தனை யெனக்கே
யெடுத்தருள் புரிந்துமெய் மையதாந்
தன்னிலை தன்னி லமைவுற வருள்வோன்
றற்பர ஞானவுத் தமனே. ௨௧

என்னலுங் கிரியை யாரிய னெந்தா
யெடுத்துநீ யுரைத்தவை யெல்லா
முன்னநா னுணர்வை யுற்றிலே னுணர்வை
யுறவறி வுடையமே லோனு
மன்னவா விடைதந் தருளுவா யெனவே
மகிழ்வுட னிறைஞ்சியே கினன்பின்
னன்னிலை விரும்பு மாணனு மையா
னுதனைத் தேடன்மே யினனால். ௨௨

யோகாசிரியன்எதிருற்று மாணவனை வினவல்.

தேடியே தபித்து நின்றவ னருகிற்
சேர்ந்தனன் யோகவா சிரியன்
வாடிநீ யிருப்ப தென்கொலோ வென்ன
மாணனு மகிழ்வுட னுரைப்பான்
வீடருள் ஞான குருவினை யடைந்தே
வெய்யதாம் பிறப்புட னிறப்பு
மோடிட வேண்டி யுளத்தினிற் பெரிதா
யுற்றனன் சோகமே யென்றான். ௨௩

யோகாசிரியன் அநுக்கிரகமு மதனை மறுத்தலும்.

சொலத்தகா யோக முத்திரை யதனிற்
சுட்டிடின் மனத்தினை யதனால்
வெலத்தகாச் சோதி வடிவமா யொன்று
மேலதாய்த் தோன்றிடு மஃதே
தூலத்திடுஞ் சோக மென்னலு மாணன்
சொல்லுவன் சுட்டுத லற்ற
நலத்ததாஞ் சோதி யென்னநான் மறைக
ளவின்றதை யுணர்த்திலை யந்தோ. ௨௪

சுட்டுத லாலே பிறப்பிறப் படைந்த
துயரதை யென்னவென் றறைவேன்
சுட்டையே யுணரு முணர்வினை யுணர்த்துந்
தூயநன் னெறியினை மறந்தாற்
கிட்டிய துன்ப மெலாமெவ ணகலுங்
கிருபைசற் றேனுமில் லாதோய்
கட்டெலா மொருங்கே களைந்திட வருள்வோன்
காணுமா ரியனிலுத் தமனே. ௨௫

என்றுமே சொல்ல யோகவா சிரிய
னெடுத்துரை செய்வன்யிக் கோய்கீ
நன்றதா யறைந்த வாய்மொழி யுணர்ந்து
நாடிட வலியிலே னறிவைச்
சென்றடை கின்ற செயலது பெற்றுய்
செல்லுவே னெனவிடை வேண்டி
நின்றன னதன்பி னிமலனே நினைந்து
நெட்டுயிர்ப் பெய்தியே கலுழ்ந்தான். உசு

மாணுக்கன் றனக்குத்தானே பரிதபித்தல்.

தன்னையே யுணர்த்துந் தற்பரன் றன்னைச்
சார்ந்தென தகவிரு ளிரிய
மன்னவ னிங்ஙன் வந்தருள் புரிந்து
மகிழ்ந்திடச் செய்வனோ வலது
சின்னவ னென்னச் சிரித்தவ னகன்று
செல்வனோ வின்னதென் றறியேன்
முன்னவா வருளச் சமையமீ தன்றோ
முத்தனே சித்தர்நா யகனே. உஎ

ஞானசிரியரெதிருறல்.

இங்குநின் றியக்கங் கொண்டமு மகவிற்
கினிமையோ டருள்செய விறங்கி
யெங்குமாய் நிறைந்தோ னெந்தனைப் போல
வெடுத்ததோ ருடலுடன் றோன்றித்
தங்குதஞ் சேயைத் தேடியே யணைந்து
தன்னமு தந்தருந் தாய்போற்
றுங்கநன் ஞான குருவெதிர் சார்ந்து
தூயனே வஞ்சிடே லென்றான். உஅ

மாணவகன் ஞானாசிரியனரை வேண்டல்.

அடுத்தவர் துயரை யடாதுநின் றகற்று
மருளிறை தன்னையுற் றளவே
விடுத்தனன் பயமுள் ளுடைந்துநெக் குருகி
மிகுதியா மூவகையுங் கடலி
லெடுத்ததோ ருடலோ டாழ்ந்தடி யிணையி
லெந்தையே சரணெனத் தாழ்ந்து
படுத்தவ னெழுந்து னன்பினன் மிடைந்து
பகவனுங் குருவெதிர் நின்றே. உகூ

அங்கமா ருடலின் மயிர்கள்குச் செறிய
வாகமும் புளகித மடையத்
துங்கநன் மொழியால் வழுத்திடு நாவுங்
குளறிடத் தாலமு நடுங்க
வங்கணீ ரருவி போலவே பெருக
வழங்கிய நற்கர மிரண்டுந்
தங்குதன் சிரமேற் குவித்துப சாந்தத்
தயைமிகு தற்பரா சரணம். ௩௰

அத்தனே சரண மமலனே சரண
மறிவரு டெய்வமே சரண
நித்தனே சரண நிர்ச்சலா சரண
நிஷ்கள நிற்குண சரணஞ்
சுத்தனே சரணஞ் சுயம்புவே சரணஞ்
சோதியிற் சோதியே சரணங்
கத்தனே சரணங் கருணையே சரணங்
காணுதற் குரியனே சரணம். ௩௧

நின்மல னேநின் னிருபதப் புணையை
நின்றுநான் பெற்றதா னினறு

புன்மய லாலே பிறப்பிறப் படைந்த
பொருதிரைக் கடற்கரை யடைவேன்
றன்மய மான தன்னையெற் குணர்த்திச்
சார்ந்தவென் னகவிரு ளிரித்தே
சின்மய மாக்க வேண்டினேன் வல்ல
தேசிகா வெனவணங் கினனால். ௩௨

ஞானாசிரியருபதே சிக்கத்தொடங்கல்.

வணங்கிமிக் கன்போ டெழுந்தெதிர் நின்ற
மாணவன் மகிழ்வழி பாடு
முணங்குத லாலே யுற்றதோர் நிலையு
முணர்ந்துரை செய்வினைக் குருவும்
பிணங்கிய கோச வலையினைப் பொடித்துப்
பிரிவிலா வின்பமே யடைய
விணங்கிநீ மகனே கேட்டதா லுயர்வா
மிவ்வழி யெவற்குமே தோன்று. ௩௩

ஆசிரியன்யான் சொன்னவாறியையி னங்ஙனமாவாயெனல்.

ஆதலாற் பரம வறிவுடை யோய்நீ
யருளுட னறைவனின் மனமோ
வீதுதா னெனவே புறஞ்செலா தகத்தே
யிருந்துநல் லூகமா கினைவா
லோதுமவ் வழித்தாய்ச் செல்லுழி நினை நீ
யுணர்ந்துதன் மயமதாய் விளங்கிச்
சாதலும் பிறப்பு நீங்கிடு நெறியீ
தாமெனச் சாற்றின னிறையோன். ௩௪

மாணவகனுவகை மிகுதியுமாசிரிய ரனுக்கிரகமும்.

உடலுடன் பொருளு மாவியா மூன்று
முவப்புட னினக்குநா னீந்த

திடமது வுண்மை யாகவே யிருக்கிற்
சிதறுமோ மனமது நசையா
லடங்கிடாச் சிறிது புறஞ்செலி னஃதை
யாண்டதோ ரருளது சுரந்தே
யிடமதா முள்ளத் தமர்ந்தக முகமா
யிருத்துத வருமையோ நினக்கே கூரு

எனவிறை மணியைக் கனிவுடன் மீட்டு
மிரந்தமா ணுக்கனைக் குருவுந்
தனதக நோக்கா னோக்கியே கரத்தாற்
றடவிச்சந் நிதிதனி லிருத்தி
யுனதுதுற் சனன பிணியகல் வதற்கோ
ருறுதியா மொழியினைக் கேட்பாய்
தனதெனும் போதப் பரம்பொரு ளீயே
சார்ந்தடை வாயென வுரைத்தான். கூசா

மாணவகன்றூல புத்தியால் வினவல்.

காணுதற் கரிய கர்த்தனே தெரியுங்
காலமூன் றதனையுங் கடந்த
பூணுநல் லடியர் தம்மைநின் னருளாற்
புனிதமாய் நிகழ்தரும் பெரியோய்
நாணினே னசையா னைந்துமே மெலியு
நான்பர மாவதெவ் வணமோ
காணுமித் தூலம லாதுவே றுண்டோ
காட்டியாட் கருணையங் கடலே. கூஎ

மெய்யலா வுடலை மெய்யென நினைந்து
மேவி நானெனநகை யுற்றுப்
பொய்யதாந் தநுவை யேனுநா னென்கிற
பொருந்தினு னிதுமிகு வியப்பே

னையுமித் தூலா சாரமா நின்ற
நண்பனே யெவ்வண மேனு
முய்யவே செயலா மெனவுளத் துணர்ந்தே
யோதுவ னெம்மையாண் டருள்வோன். ௩அ

தன்னையே மறந்து தாரணி தன்னிற்
றயித்துநின் றழுதழுன் மகனே
யென்னையே விரும்பி நானெனும் பொருளை
யியல்புடன் கேட்டதா னினக்கே
பின்னையு முரைப்பேன் லட்சண மூன்றைப்
பிரித்துச்சொன் மறைமுடிப் பொருளா
லுன்னையே யுசாவி யுணர்வைநீ யென்ன
வோதின னுரியவற் குரியோன். ௩௯

இல்க்ஷணத்திரைய நாமங்கூறல்.

அடிக்கம லங்க ளன்புடன் பணியு
மடியவர் வேண்டிய வனைத்து
மெடுத்துடன் கொடுக்குங் கொடைமிகு வள்ளா
லியம்பிய லட்சண மூன்றை
விடுத்துரை செயதெற் கருளுவா யென்ன
விமலனை யிறைஞ்சின னசன்பி
னடுத்ததோர் மகனே யசத்துவா விருத்தி
யமைவதாந் தடத்தனற் சொரூபம். ௪0

தூலமேதானெனலு மஃதலவெனலும்.

ஆகிய விம்மூ விலக்கணந் தன்னை
யறைவனுன் படலமூ வகையா
யேகமா மதத்து வாவிருத் தியினை
யியம்புவே னவியுமித் தூல

தேகநீ யல்லை யென்னமா ணுக்கன்
செப்புவ னுலகினி லெவரும்
போகமே புசித்தற் கிவ்வுட லலது
பொருந்துதல் வேறெதோ புனிதா. சுக

உடறனைப் பொருளாய்க் கொண்டுழல் கின்றோய்
வுடலைவிட் டுயிர்பிரிந் தளவே
வுடலுமிப் போகம் புசித்திடாக் கிடையி
னுலைவதென் றினஞ்சுழுத் திபினி
னுடல்தாந் தூல சரீரமு மெங்ங
னுற்றதை யுணர்ந்துரை யென்ன
கடலின் றோசை போலவே யெனவே
கதறிநின் றழுதுசொல் லுவனால். சுஉ

அஞ்சினே னன்று யறிவிலா மையினு
லாழ்ந்தன னனந்தசென் மத்தி
னெஞ்சலைத் தவிர்த்தே னிணங்கிடாத் தூல
மெனைவிட் வேறென் வுணர்ந்தேன்
பஞ்சையாந் தூல சரீரமீ தெனவே
பகுத்துணர்ந் திடவருள் புரியத்
தஞ்சநீ யல்லா லியாதுள் ளெனக்கே
சாற்றுவாய் தனிப்பரம் பொருளே. சுங

பூதபஞ் சகத்தின் பிரிவுசை யோகப்
பொருத்தமே பவுதிக வுடலா
மீதுசோ ணிதர் மென்புடன் மச்சை
யிறைச்சியுஞ் சுக்கிலத் துடனே
மேதையு ரோம மெலாமணுச் சேர்ந்தே
மேவிய தாலிவை தன்னை

நீதியா லீதீ தன்றென வோர்வை
நீயிவைக் கயலென வறிவாய் சஈ

ஞானேந்திரியம் விடையம்தானெனக் கொண்ட மாணு
க்கன் புத்தியினை நேதியால்கற்றல்
சத்தமும் பரிசம் ரூபமும் ரசமுஞ்
சார்ந்திடு கந்தமை வகையை
நித்தமு மெய்வாய் கண்செவி மூக்கு
நின்றுணர்ந்திடு விடயந்தான்
கத்தனே நானென் றோர்ந்தன னிதனைக்
காட்டியே காத்தருள் புரியு
முத்தனே முதல்வா முதுமறை புகழு
முனிவனே யெனப்பணிந் தனனால். சரு

உடன்முத லான வைவகைப் பொறியு
முற்றதோர் விடையமுங் கேண்மோ
திடமதா முறக்கந் தன்னிலிப் பொறிகள்
சேர்ந்ததோர் சத்தமா திகளை
யிடைவிடா துணரா திருப்பதென் ஞான
விந்திய பஞ்சகந் தனையுங்
கடையதா மஃதின் விடையமு மிங்ஙன்
காட்டுதுங் கலங்கிடா துணரே. சசா

செவியிலே சுரோத்ர விந்திய மிருந்து
செவ்விதாய்ச் சத்தமே யுணருங்
கவருமிவ் வுடலிற் றொக்கிருந் தமையால்
கடினபரி சத்தையே யறியு
மவிர்தாற் குரிய விழிநனி யதனி
லமர்சட்சு ரூபமே தெரியு
நவமதா நாவி னுனியிலே சிருவை
நாடின தாற்சுவை யுணரும். சஎ

இலகிடு நாசி நுனியிலாக் கரண
மிருந்துகந் தத்தையே யுணருங்
குலவிடு பொறியாம் ஞானவிந் தியத்தாற்
சொல்லுமிவ் விடையமு மலநீ
பலவித மான வினையொழித் துணர்வாய்
பாலனே யென்னமா ணாக்கன்
சுலபமாய் விடைய மியாவையு முணரு
மிந்திய நானெனத் துணிந்தேன். சஅ

என்னவே யோர்ந்தே னெங்குரு பரனே
யெனக்கிசைத் தருள்புரிந் தாளென்
றன்னவன் பணிய வமலனு முரைப்பா
னறியுஞா னேந்தியந் தன்னை
யுன்னிநீ யுணர்வா யாதலா லுன்னை
யுணர்ந்திடா ஞானவிந் தியங்க
டன்னுமிந் தியங்க டம்மையு முணராத்
தூய்மையா யொன்றுமற் றொன்றை. சகூ

பிரித்துமே யுணர வலியில தாலும்
பிணக்கிலா விந்திய கவர்ச்சி
விரித்துநீ யோர்வ தாலுமக் கவர்ச்சி
விளக்கமு மின்மையு நீயே
யுரித்ததா யிருந்தே யோர்வதி னாலு
முனக்கிவை வேறதென் றுணர்வாய்
குறித்ததோர் கன்ம விந்திய மைந்தைக்
கூறுவேன் குவிந்துநீ கேண்மோ. ருய

கன்மேந்திய மீதெனல்.

வாக்குடன் பாதம் பாணிபா யுருவும்
வழங்கிடு முபத்தமை வகையில்

வாக்கது வசனஞ் செய்திடும்பாதம்
வளமையாய் நடந்திடும் பாணி
நோக்கியே தானஞ் செய்யும்பா யுருவு
நுண்மையாய் மலஜல மகற்றுந்
தாக்கிடு முபத்தமா னந்தமே யடையுஞ்
சார்ந்தஞா னேந்திய மதற்கும். ௫௧

ஞானேந்திய கன்மேந்திய வுறவினை மொழிந் தகற்றல்.

விளங்கிடுங் கன்ம விந்திய மதற்கு
மிகுதியா முறவினை யுரைப்பேன்
களங்கமில் சுரோத்ரஞ் சத்தமே யுணர்ந்து
காட்டிடும் வாக்கினால் வசனம்
வழங்குசட் சதுதா னுருவகன் கறிந்தே
வாழிரு பதத்தினா னடக்கும்
புழங்குதொக் கதுவோ பரிசமீங் கறிந்து
புழுக்கமே பாணியாற் சகிக்கும் ௫௨

இலக்குசிங் குவையோ ரசத்தையே யுணர்ந்தங்
கியற்றிடும் பாயுரால் விசர்க்கம்
விலக்கமில் கராணங் கந்தமீங் கறிந்தே
விம்மிடு முபத்தத்தாற் சுகிக்குந்
துலக்கமாங் கன்மேந் தியத்தொழி லதையுந்
தோயிரண் டின்மையு நீயே
கலக்கமி லாது நின்றுணர் வதினாற்
கன்மவிந் தியவினை யுணரா. ௫௩

ஆதலாற் கன்ம விந்திய நினக்கே
யயலதென் றோர்வையென் மாணு
வோதுமிவ் விரண்டிந் தியமெலாஞ் சேர்ந்தே
யுற்றது தூலதே கமதா

நீதியாய்க் கரணச் சேர்க்கையிங் குற்றே
நிகழுமித் தூலமென் றுணர்வாய்
போதமி றூல நோயதேர் வாதம்
புகலுதும் பித்தமுங் கபமே. ௫௪

கரணமே நானெனல்.

அன்னைபோல் பவனே யெனதகந் நீதியி
லகன்றிடா மயலது முண்டோ
நின்னருள் வாக்கா லிந்திய மிரண்டு
நீக்கினேன் கரணமே நானென்
றுன்னினே னிதனி னுறுதியா மில்லை
யுய்யுமா றெனக்கிசை யெனவே
நன்னல மடைந்த மாணனும் வணங்க
நாதனு நவிறன்மே யினனால். ௫௫

கரணமீதெனலும் நீயவையலவெனலும்.

அயலதா மந்தக் கரணநான் கினையு
மறைவனுன் மனமுடன் புத்தி
யயர்விற்சித் தமுமாங் காரமு மினிமே
லருள்வனிங் கனமிதின் றொழிலை
நியமமா மனமு நினைத்திடும் புத்தி
நினைத்ததை விசாரணை புரியுஞ்
சயமிலாச் சித்தம் விசாரணைப் பொருளைச்
சலபமாய்த் திரப்படுத் திடுமே. ௫௬

திரப்படுத் தினதை யகங்கா மெழுப்பிச்
செய்துடன் முடிக்குமிக் கரணம்
பரமதா மின்னை யோர்ந்திடா நீயும்
பகுத்தறிந் திடுவதி னானுங்

காரணநற் றொழிலு மின்மையுநீயே
கண்டுணர்ந் திடுவதாற் காரணம்
புரமதா னெனக்கே ப்ராணசம் பந்தம்
பொருந்தியே யியங்கிடுங் கரணம். ௫௭

பிராணவாயுவே நானெனல்.

என்றுநல் வேத முனிகுரு மொழிய
வினியமா ணாக்கனு மிறைஞ்சி
நன்றதா யுரைத்த வாய்மொழி யதனு
ளுதனே கரணம்வே றென்றே
நின்றனன் பிராணன் றன்னோரா னென்றே
நினைந்தன னெற்கரு ளென்னத்
துன்றுவா தனையை யகற்றிடற் குரிய
தூயவ னிசைத்தன்மே யினனுல். ௫௮

தன்னையே மறந்து தாரணி தன்னிற்
றபித்துழ லுலகினர் போல
வுன்னைநீ மதித்தா யுற்றவா யுக்க
ளுருபிரா ணதிபத் தாகு
முன்னிடும் பிராண னபான சமான
னுதானனும் வியானனு நாகன்
றன்னிலே கூர்மன் கிரிசரன் றேவ
தத்தனுந் தனஞ்செய னெனவே. ௫௯
இதையமே நின்று பிராணனு மூச்சை
இழுத்தலும் விடுத்தலும் புரியும்
பதைக்கும பானன் குதத்தினி லுற்றே
பரிவுடன் மலசலந் தள்ளும்
வதைசெயுஞ் சமான னுந்தியைச் சேர்ந்தே
வந்ததோரு ணவின்றன் ரசத்தைச்

சிதைவிலா துறப்பிற் பகுத்துமே சேர்க்குந்
தின்றனை யுதான னுங் களத்தே. ௯௰

உற்றுற்கா ரமதாய்ப் புரிந்திடும் வியான
னுடம்பெலா நின்றுமூட் டுகளைச்
சுற்றியே திரும்பச் செய்திடு நாகன்
சோம்பலு மூக்கலுந் திமிர்ப்பும்
பற்றவே செய்யுங் கூர்மனும் விக்கல்
பான்முகத் தழகுங்கண் களிப்பும்
பெற்றதோர் மயிர்கள் கூச்சலும் புளகம்
பிரிவில்கொட் டாவியுஞ் செயுமே. ௯௧

தும்மலு மிருமனிமைகொட்டு வித்துஞ்
சூழ்ந்தழச் செயுங்கிரி கானே
விப்பியே தேவ தத்தனே நகைப்பு
மிகச்செய்வன் றனஞ்சயன் றானுஞ்
செம்மையாய்ப் பிராண னீங்கின் பின்னர்
சேர்ந்துதா லத்தைவீங் கிடவு
மிம்மனி லஃதை நாளதா மைந்தி
லியல்புடன் வெடித்துமே குவனே. ௯௨

சொன்னதோர் பிராணனுதியைந்தினையுஞ்
சொல்லுவே னகத்துறுவாய்வா
முன்னுநா காதி யைந்துவா யுக்க
ளுறுப்புற வாய்வதா மிதனி
னஃனிலை யான தானமுந் தொழிலு
நலமிகு பிராணசம் பந்த
மன்னினு லலதிங் கிலையென வுணர்வாய்
மயலறு மாணனே கேண்மோ. ௯௩

ஏவுமிப் பிராண வாயுவை நீயே
யிருந்துணர்ந் திடுவதி னானுந்
தாவுமப் பிராண னின்னையே யுணரச்
சத்திசற் றிலாமையி னானு
மாவதாம் பிராண வியக்கமுந் தொழிலு
மதனத னின்மையும் வேறாய்
மேவினின் றோர்வை யாதலா லலைநீ
விளம்புதுஞ் சீவனே நானே. சுச

மாணாக்கன் சீவனே நானெனல்.

என்னவா சிரியன் மொழிதர மாண
னெழுந்தடி பணிந்துமின் றுரைப்பா
னென்னைப்போல் வாடு மடியராம் பயிர்க்கா
யெழுந்தருள்புரியுமா முகிலே
நின்னருள் வசன மழையினாற் பிராண
னிலையைநா னலமென வோர்ந்தேன்
சொன்னதோர் சீவ னானென வுணர்ந்தேன்
றொகுத்துநீ கருணையோ டிசையாய். சுரு

சீவனீதெனலு மஃதுநீயலவெனலும்.

தாமத மிலாமற் சாற்றுவே னஃதைச்
சார்ந்துநீ கேளென மொழிவான்
காமமுங் குரோத லோபமு மோகக்
கடுமதத் துடனேமாச் சரிய
நேமமிச் செயலை யுடையதே சீவ
னீயிதை யோர்வதி னானுஞ்
சேமமா நின்னை யோர்ந்திடாச் சீவன்
செயலையு மின்மையு நீயே. சுசு

அறிவேநீ யென்னவஃதெவனுவனென்பதையுணருமாறு சூக்குமவுடலிதெனல்.

ஏகமாய் நின்று பகுத்துணர் பவனு
யிருத்தலா லவையல நீயே
சோக மில்லாத வறிவுநீ யென்னச்
சொல்லுவன் மாணவெனங் குருவே
பாகமா மறிவே நானென லெவ்வண்ணம்
பான்மையோட ருள்செயா யென்ன
வூசமா யினிமேற் சூக்கும வுடலை
யுரைப்பதை யுவப்புடன் கேண்மோ. ௬௭

தியங்கு நன்மகனுஞ் சூக்கும வுடலைச்
செப்பென வருட்குரு மொழிவா
னியங்கிடும் பிராணவாயுவு மனமு
மிங்குறுபுத்தியுஞ் சேர்ந்தே
மயங்கு நித்திரையி லுலாவுத லஃதே
வஃது சூக்கும்வுட லாகுஞ்
சுயமதா கியநீ சூக்கும வுடலைச்
சுலபமா யறிவதி னுனும். ௬௮

பகருசூக் குமமு முன்னையோர் வதற்கோர்
பண்புசற் றிலாமையி னுனு
நிகரிலா நீசூக் குமவுட லதன்றன்
னிகழ்வையு மின்மையு மறிந்தே
சுகமதா யிருப்ப தாதலா லவைக்கே
சொல்லுவ னயலென வறிவாய்
தகமையோ டிதனி லுள்ளசந் தேகஞ்
சாற்றென வினவின னிறையோன். ௬௯

மிக்கவன் போடு வணங்கிநின் றேத்தி
விளம்புவன் மாணனும் பெரிதாய்ப்

புக்குமஞ் ஞான விநளையோர் மொழியாற்
புறத்தகன் றிடச் செயும் புனிதர்
தக்கருக் குமடமா ருடல் பதினேழு
தத்துவ மெனச் சுருதிகளிற்
பக்குவ மாகவு ரைப்பவிந் தியத்தைப்
பான்மையோ டகற்றின் தென்னே. ௭௰

நித்திரை யதனிற் சூக்கும வுடலு
நிகழுமிந் தியங்களா மிரண்டாற்
சத்தியமாக வோர்தலுந் தொழிலைத்
தருதியாய்ச் செயாமைபி னனு
நித்திய மிஃதே யனுபவமாக
நிகழ்வதா லஃதின் வாசனைதான்
பத்தியாய்க் கரணத் தடங்கி நிற்பதினுற்
பண்புட னகற்றினே னறிவாய். ௭௧

காரணவுடலீ தெனலுமஃது நீயலவெனலும்.

அவித்தை யதான காரண வுடலை
யறைவதை யன்புடன் கேண்மோ
குவியுமஞ் ஞான விருளெஃ தஃதே
கூறுகா ரணவுட லாகுந்
தவிரு மஞ்ஞான விநளதா முடலுந்
தனித்துனை யோர்ந்திடா ததனுற்
பவிதமி விருளா முடலையின் மையையும்
பகுத்தறி நினக்கவை யயலாம். ௭௨

கோசங்களீதெனல்.

அறிவதா நினக்கே யயலதாங் கோச
மைவகைக் குகைபினை மொழிவேன்

செறிவுறுமன்னம்பிராணனுமனமுஞ்
சேர்ந்தவிஞ் ஞானமா னந்தங்
குறியுடை யன்ன பானமா திகளாற்
குவிந்தெழுந் தூலமன் னமதா
முறியருக் குமமா முடற்குகை மூன்று
யுற்றிடும் பிராணனுங் கன்மம். எ௩.

இந்திய மதனின் வாசனை சேர்ந்தே
யியங்குதல் பிராணகோ சமதாம்
சொந்தமா மனமு ஞாவிந் தியத்தின்
சூழ்ந்தவா சனையுமொத் ததுதான்
மைந்தனே யிஃது மனோமய கோச
மகிழ்ந்திடும் புத்தியும் ஞான
விந்திய மதனின் வாசனை யொத்தே
யிருத்தல்விஞ் ஞானகோ சமதாம். எ௪

காரண வுடலிற் கரணவா தனைகள்
கழிந்தபின் னுறுசுக மதுதான்
பூரண மில்லா னந்தகோ சமுமாம்
புகன்றவிக் கோசமைந் தினையுந்
தாரண சொரூப மானநீ யறிவாய்
தனித்துனைக் கோசமு மறியா
வாரணக் கோச மொன்றை யொன்றறியா
வளமையாங் கோசமின் மையையே. எ௫

நின்றநீ யுணர்வா யிருந்துணர் வதனு
னினைக்சவை யஃதெனை வறிவா
யென்றெம தண்ண லானசற் குருவு
மிசைத்திட மாணனுமுரைப்பான்
பொன்றுசீ வற்கே தூலமுன் றுறைற்
பொருந்திய கோசமை வகையுந்

துன்றுத லானசரீரமூன் றதனைச்
சூழ்வதே னுடலதாய்ப் புனிதா. எசு

கோசமைந் தினையுந் தெரிந்ததாற் பயனைக்
கூறுவா யெனவவன் வினவ
வீசனு மிறையு மியல்புட னுணர்த்த
வியம்புவன் மாணனே கேண்மோ
கோசமுத் தூலத் தம்சமாய் நிகழுங்
கோசமுஞ் சீவனுக் குரித்தாங்
கோசமோ வறிவா னந்துக்கு வேறென்றே
கொள்ளுதல் பயனென வறிவாய். எஎ

கூடத்தனிதென்னு மவத்தைகளிதென்னும்.

எவற்றையுஞ் சாக்ஷி மாத்திர மாக
விருந்தறிந் திடுமறி வதுதான்
றவநிலை யாங்கூ டத்தனே யென்னச்
சாற்றினே னின்னுஞ் சந்தேகந்
தவிருதற் பொருட்டே யவத்தையைமொழிவேன்
சார்ந்துநீ கேளென வுரைத்தான்
புவனமூன் றினுந்தா னுகநின் றொளிரும்
பூரண னெமக்கரு ளருள்வோன். எஅ

அனுவதா கியவஞ் ஞானமா மிருளி
லாழ்ந்திடு மென்னைப்பே ரன்பா
னனுகிடா வண்மே போதமா மொளியை
காட்டியே யிருடனை யிருத்தே
துணிவடி வாக்கத் துவஜமே கொண்ட
தூயசற் சொரூபனே யென்னப்
பணிந்துநின் றவத்தை பகரென வினவப்
பான்மையோ டிலக்கத்தன் மேயினனுல். எகூ

இனியவத் தையினை யியம்புவ னஃதோ
விசைந்திடுந் திரிவித மெனவே
கனவினன் னனவுங் கனவினிற் கனவுங்
காக்ஷியில் சுழுத்திய தெனவாங்
கனவினன் னனவோ ஞானவிந் தியமுங்
கன்மவிந் தியத்துடன் கரணம்
பிணும்பிரா ணனுஞ்சீ வனுமொருங் காகப்
பெரியதாந் தூலமே சேர்ந்தே. ௮௦

இயங்கியே விடையத் தினையனு பவித்த
விலங்கிடுங் கனவினன் னனவாம்
பயமிலா வஃதிற் சாக்ஷியாய் நின்றே
பகுத்தறி போதமே நீயாஞ்
சுயமிலாக் கனவி னனவின்வா சனைதாஞ்
சூழ்ந்ததை யினியுரைத் திடுவே
னயலதாம் பிராணன் மனதும் புத்தியுந்தா
னமைந்தகூக் குமவுட லுடனே. ௮௧

நித்திரை யதனிற் சீவனு மருவி
நின்றெழு மனோவிருத் தியதாம்
பத்தியிற் சாக்ஷி யாகவே நின்று
பகுத்தறி போதநீ யென்ன
வெத்திசை போற்று மிறைவனை நோக்கி
யியம்புவன் மாணவ னினியோய்
நித்தியந் தூக்கம் வருவதெற் றினுக்கோ
நிகழ்ந்ததென வினவினன் மாணன். ௮௨

சொல்லுவே னறிவி லுயர்ந்தவென் மாணு
சொற்பன மிருபுடை பெயர்ச்சி
வல்லதா மஃதே நனவுடன் கனவாம்

வளமையாய்ச்சொற்பன நனவி
லெல்லை சற்றில்லா விடையமே பொசித்த
வெய்ப்பதே நித்திரை யாகுந்
தொல்லையாம் விடைய வாசனை விடாது
சூழ்வதே கனவினிற் கனவே. ௮௩

சொற்பன நனவிற் கனவில தாலுஞ்
சொற்பனக் கனவிலே நனவு
மற்பமு மில்லா ததலா லவைக்கே
யயலெனு வறிவதே நீயாங்
கற்பனைக் குரிய சுழுத்தியோ விருளாங்
காரண வுடலுடன் சீவ
னற்புத மாக மருவியே போலி
யானந்த மவித்தையா லடைந்தும். ௮௪

கனவினிற் கனவின் மனோவிருத் தியதாய்க்
கற்பனை புரிவதா யியைந்துங்
கனவினன் னனவிற் பொறிகர ணாதி
காக்ஷியால் விடையமே புசித்துந்
தனதெனு மவத்தை யால்விரிந் திடவுந்
தான்விரித் ததையொடுக் கிடவு
மனுதின மிஃதை யியற்றுவ தெஃதோ
வன்னது சுழுத்தியி தாமால். ௮௫

அனுதினந் தோற்ற மொன்றுமில் லாம
லடைந்தனன் னித்திரை சுகமா
மெனுமனு பவத்தைச் சாக்ஷியாய் நின்றே
யியம்புவ தறிவதி னானும்
பினுமவத் தையதாஞ் சுழுத்தியி னியல்பும்
பிணைந்திடாச் சுழுத்தியின் மையையு

மனிசமுஞ் சோரா தவத்தைமூன் றினையு
மயலதா யறிபவ னீயே. ௮௬

பிரபல சுருதி ஜாக்கிர மெனவும்
பின்வருஞ் சொற்பன மெனவுந்
தரமுட னுரைக்கச் சாக்கிர நீக்கிச்
சாற்றிய சொற்பன மிரண்டாய்
விரித்ததெற் றினுக்கோ விளம்பென மாணன்
வினவிட வருட்குரு மொழிவான்
பரமமா மறிவே சருவசாக் கிரமாம்
பண்பினை யுறுதலி னாலும். ௮௭

ஜாக்கிரமான வவத்தையா லுடனுஞ்
சார்ந்தஜீ வனுமயர் வடைந்தே
நீக்கினிற் பதினு லதற்குஜாக் கிரத்தை
நிகழ்த்துத னிலையுறு தெனவே
போக்கிச்சாக் கிரமாம் விழிப்பது நினக்கே
பொருத்துஞ் சொற்பனமென விரண்டி
னாக்கமோ ரொன்றின் வாசனை யொன்று
யுறுதலா லஃதிரண் டாமால். ௮௮

பிரமமே சொரூப மாக்கவந் தாண்ட
பேரறி வானவெங் குருவே
சிரவண மனனஞ் செய்ததை யுளத்திற்
சிந்தனை புரிந்து நிற்றற்கே
யுரியது கனவி னனவிலே தோற்ற
முறுதலான் மற்றைய வவத்தை
யிரண்டினி லதுபோ லியைந்திடா திருப்ப
திசையென மாணனும் வினவ. ௮௯

தன்னைப்பார்த்தலே துரியமெனல்.

பந்தமென் பதனைப் பறித்தெறிந் தயலைப்
பற்றுத லற்றதாற் பிழைத்தாய்
சிந்தனை புரிந்து நிலையுறன் மூன்றாய்ச்
செனித்தவவ் வவத்தையிற் சுற்றும்.
வந்துறுச் ஜாக்ரசுழூத்தியாந் துரியம்
வாய்த்ததா லறிவைச் சிந்திக்கத்
தொந்தமா மதுது நீங்கிநிற் பதுவே
தொன்மை யதீதமென் றுணர்வாய். ௬௦

சுழூத்தியிற்போலிச்சுகந்தோன்றியது போல்மற்றி ரண்டினுந்
தோன்றுதென்னெனும் வினாவிற்கு வுவமை பூருவமாயுணர்
த்தி, துரியம் அதீதமீதெனல்.

சுழூத்தியிற் போலிச் சுகமது வந்தே
சூழ்வது போலமற் றிரண்டிற்
பழுத்திடா தெவணம் பான்மையோ டருள்வாய்
பகவனே யென்னமா ணாக்கன்
வழூத்திட வமல தேசிக வடிவ
மாதவன் மகிழ்வுட னுரைப்பா
னழூத்தமா யிஃதை யுவமைபூ ருவமா
யறியென வறைதன்மே யினனால். ௬௧

உலகிலோர் புருட னுடன்மய மானோ
னுவப்பிலாப் பெரியமுட் காட்டிற்
பலவிதப் பகைவர் தடியடி யதனாற்
பரதவித் தயர்ந்துதன் விட்டைச்
சுலபமாய் நடந்து வந்திருந் ததன்பின்
சூழ்ந்தசோ கங்கண்மாற் றுவன்போ
லலைதலே யுடைய சொற்பன மிரண்டா
லமைந்த தோர்ந்னவி னிற்றானே. ௬௨

சீவனை யிச்சை யென்னும் வெங்காட்டிற்
சினந்தெழும் பொறியதாம் பகைவர்
தாவிடும் விடையத் தடியினாற் றாக்கச்
சலித்தனன் கனவினிற் கனவா
மேவுமவ் வழியி லாங்கவ னடந்து
மெல்லிதாய்ச் சுழுத்தியிற் சுகத்தை
யோவியம் போல வுறுவனேல் வருத்த
மொன்றிய சலிப்பிலு நடந்தே. ௯௩

போகுமவ் வழியி லுஞ்சுகப் போலி
பொருந்துத லெவணமென் றறிநீ
வாகதாய்த் தன்னை யாய்பவர் தமக்கே
வந்துறுஞ் சகசமே வடிவ
பாகமாந் துரிய மதனிலே நின்றப்
பாலதா மதீதமு நிகழுஞ்
சோகமே யுற்றுத் தன்னையா யாரைச்
சுழுத்தியோ டிரண்டு மேவிடுமே. ௯௪

தன்னிலே யான வறிவெதோ வஃதைச்
சாற்றினேன் றுரியமே யென்னப்
பின்னுமன் னிலையி னினக்குச் சந்தேகம்
பிறந்திடா வகைமறை முடிவாய்
மன்னுமா வாக்கி யத்தையே மொழிவேன்
மகிழ்வுடன் கேட்டறி யென்றே
சொன்னவா சிரியன் றன்னையே தொழுது
சொல்லுவன் மாணனு மகிழ்ந்தே. ௯௫

அருண்மிகச் சுரந்திவ் வடியனை யாண்டே
யறிவுறு வாக்கிய வறிவே
மருளினை மாற்ற வல்லநீ யல்லான்

மற்றொரு விதத்தினு ணகலாத்
தொருண்மய மான வாக்கிய மதனைச்
செப்பென மாணவ னிறைஞ்சி
யொருவழி நிற்ப வுவப்புட னுரைப்பா
னுத்தமர்க் குரியவுத் தமனே. ௬௬

சாமவாக்கியதொம்பதமுணர்த்தல்.

வேதமாஞ் சாமமுடி வினிற் பொருளாய்
விளங்கிடுந் தத்துவ மசியி
லோதுமே வினங்கன் தொம்பத மதனை
யுரியதத் பதமசி பதத்தை
நீதியாய்ப் பின்னர்ப் படலமா மிரண்டி
னிகழ்த்துவேன் றொம்பத மதுதான்
சாதுவே யருத்தமி ரண்டதா மஃதோ
சார்ந்திடும் வாச்சிய மெனவும். ௬௭

உருவமில் லாத லக்ஷிய மெனவு
மோதிய தூலமூன் றினையும்
வருத்தமா மவத்தை மூன்றையும் பொருந்தி
வாழ்ந்திடுஞ் சீவன்வாச் சியனு
மிரித்ததா யிருந்தே சீவனை யுணரு
முணர்வதாக் துரியமே யான
பெரியதா மறிவா யிலங்குத லஃதே
பெற்றிடும் லக்ஷிய மெனவே. ௬௮

ஞானமாக் துரிய வடிவமா மறிவே
ஞாயஞ்சே ரதனையுடன் பொருத்த
மீனமில் லாம லுருவதா லஃதே
யியையுங் கூடத்தனே யென்ன
மோனமா மறிவி லின்னுஞ் சந்தேக

முளைத்திடா வணமிலக் கணையை
நானுரைப் பதனை யறிகென மொழிந்த
நாதனைச் சீடனு மிறைஞ்சி. ௯௯

எங்குமாய் நிறைந்தோ ரறிவெனு முடலை
யெடுத்தவர் தம்மையின் றுள்வோய்
பங்கமில் லறிவாஞ் சுத்தநன் னீரிற்
பாசிவந் தணுகிடா வணமே
வங்கமேற் கொண்டு வாரியை யொழிந்த
மாதவா விலக்கணை யதனைச்
சங்கையில் லாம லுரையென வென்னைச்
சார்ந்தருள் புரிந்தவ னிசைப்பான். ௱

மூன்றிலக்கணையில்விட்டலக்கணையைத்தெளல்,

விட்டலக்கணையும் விடாதலக் கணையும்
விட்டும்விடாதலக் கணையுந்
திட்டமா மூன்றி லொன்றையீ யிங்ஙன்
செப்புவே னீதெரிந் திடவே
யிட்டமா யிரண்டைப் பின்னராம் படலத்
திசைப்பன்விட் டதையினிக் கேண்மோ
கட்டமாஞ் சரீர முதலவா யெவையுங்
கழைந்துமிசன் றதனின்மே லுறுவோன். ௱௧

அறிவையணு வுக்கணுவாய்த்தரிசித்தலும், அதத்துவா
விருத்தி யினருத்தமு முணர்த்தல்.

அல்லவற் றிலங்குங் கூடித்தா னென்னு
மறிவினைச் சுருதியோ டுத்திக்
கெல்லைய தாள வனுபவ மாகு

வினையந்தறிந் திடுவது தானே
வல்லவத் துவினை யணுவினுக் கணுவாய்
மகிழ்வுடன் றெரிசித்த தாகுந்
தொல்லைசற் றில்லாத் தூயசற் பரம
சோதிக்குஞ் சோதியீ தாமால் ௱௨

அறிவெனுஞ் சொரூப மானகூடத்த
னயலல நீயெனத் தெளிவாய்
செறிவதா மெவைச்சும் வேறதாய் நீயே
தெரிவதா லதத்துவா விருத்தி
நிறையடைந் தவனு நீயென மொழிந்த
நிமலனை மாணனும் வணங்கி
குறைவிலா துரிய வறிவுநா னென்றே
கொண்டுணர்ந் தனன்குரு முனியே. ௱௩

மாணுக்கன் அறிவே நானெனத்தெளிந்தே னெனல்.

சற்றுமோ ரைய மிலதுநா னறிவே
தடையறத் தெளிந்தன னெனது
நற்றவப் பொருளே யென்னநின் றேத்த
நவிலுவன் குறையெலாந் தவிர்ப்போன்
பற்றுத லில்லாத் தடத்தநற் படலம்
பகருவே னதைநிறை யுணர்வா
யுற்றநீ கேளென் றோதின னெமக்கே
யொழிவி லானந்தமீந் தருள்வோன். ௱௪

1-வது அதத்துவாவிருத்திப்படலம்.

முற்றும்.

ஸ்ரீ சற்குருவேநம:

# 2-வது தடத்தப் படலம்.

———(o)———

பிரமமே நீயெனலும் அதன்விளக்கமு முணர்த்தல்.

அகம்புறமில்லா வகண்டபூரணநல்
லமுதமாங் குணமது கினக்கே
தருமெனவடியர் துதிப்பதற்கியைந்த
தாரண சொருபனே தடத்த
மிகுபட லத்தை விரித்தருள் புரிந்தாள்
வேதனே யென்னமா ணாக்கன்
சுகமதா யிறைஞ்சியேத்தியே வினவச்
சொல்லுவன் வடிவெலா முடையோன். ௫

பிரமமென் பதுவு நீயென வொழியப்
பேசுவன் மாணனும் பிரமந்
திரமதா யெவண மாவனு மென்னச்
சிரித்து மேலுரைப்பன்மா முனியும்
பிரமமல் லாம லெவைக்குமே விளக்கம்
பிறந்திடா தாதலா லதனைக்
கிரமமா மொழியக் கேளென வருள்வான்
கேடிலா ஞானகு ரியனே ௬

பாகியப்பிரபஞ்ச மீதெனலு மஃதினுமமு முணர்த்தல்.

பாகியாந் தரமென் றரைபிர பஞ்சப்
பண்பது மிரண்டதா மஃதி
னாகமாய் முன்ன நுரைத்ததோர் படலத்
துற்றிடு மந்தா மதுதான்
பாகிய மாம்ப்ர பஞ்சமும் பூத

பஞ்சக மலதுவே றிலையால்
வாகதாம் பூதம் வான்வளி வன்னி
வனமணைந் தெனவறிந் திடுவாய் ௭௭

### பூதங்களின் குணமுணர்த்தல்.

சத்தமாங் குணமே வானது பொருந்தஞ்
சத்தமும் பரிசமும் வளிக்காஞ்
சத்தமும் பரிசம் ரூபமு மெரிக்காஞ்
சத்தமும் பரிசரூ பத்தோ
டொத்ததா மிரச குணத்தையே யடையு
மொப்பிலா நீரது தானே
சத்தமும் பரிச மூரொளி நாற்றஞ்
சார்ந்திடு மண்ணது மாதோ ௭௮

### பூதங்களின் விளக்க முணர்த்தல்.

தோற்றமே யிலாம லெங்குமாய் விளக்கஞ்
சூழ்வதா காயமா மசைதல்
காற்றுறும் வெப்ப மானதோர் விளக்கங்
கனல் பெறும் நெகிழ்வதாம் விளக்க
நாற்றமில் லாத ஜலமது பொருந்து
நாடிடுங் கடினமாம் விளக்க
மேற்றமாய் மண்ணை யியைந்திடும் பிரம
மிலாதிவை விளக்கமே யடையா. ௭௯

பிரம்மமானது எவ்விதம் பூதங்களையுண்டாக்கினதென்றும்,
உலகை நாடுவோர்யாவ ரென்றும்,
இதின்விளக்கம் நான்றெரிந்தசாற் பயன்யாதென்றும்,
மாணாக்கன் வினவல்.

என்றுநல் வேத முனிகுரு மொழிய
வினியமா ணாக்கனு மிறைஞ்சி

நின்றிவ னுரைப்பா னிமலனே பிரம
நிலமுத லாகிய வைந்தை
நன்றதா யெவண மியற்றின தினைதை
நாடுவதா ரிதின் விளக்கஞ்
சென்று நான் றெரிந்த தாற்பயன் யாது
செப்பென வினவினன் மாணன் ௫௰

ஆசிரியர், பூதோற்பத்தியும், அவைபவரினிலக்கணமும்
ஆம்பயனுங் கூறல்

நன்மையாம் பிரம நிலமுதலியனைத
நசையுட னியற்றிய தலவர்
மின்மையாம் வடிவ மாயையைப் பிரம
மிணைந்ததா லுறுப்ரதிபிம்பத்
தன்மையா மீசன் மனவெளி யணுவிற்
சகமெனு மகண்ட வாகாயம்
வன்மையாய்த் தோன்ற வானணு வினிமேல்
வாய்வதா மகண்டமே யுதிக்கும். ௫௰௧

வாயுவி னணுவி லகண்டமா மெரியு
வந்திடு மதனணு வினிலே
தோயமா மகண்டந் தோன்றின விஃதாற்
றோற்றிய வணுவிலே வழுக்க
தாயமண் ணகண்ட முதித்தன விதன்ற
னணுவுடன் மற்றைய நான்காந்
தூயபூ தத்தி னும்சஞ்சேர்ந் ததுவே
தொகைபஞ்சீ கரணம தாமால் ௫௰௨

சொல்லிய விஃதாற் சமட்டியாந் தூலந்
தோன்றின விஃதையே யீசன்

மெல்லிதா யியற்றச் சமட்டியாஞ் சிவர்
மெய்யதா மூன்றுமீ சற்கே
தொல்லையி லாத வுடலதாஞ் சமட்டி
தோற்றமாஞ் சீவர்க ளவத்தை
புல்லிய மூன்று மீசனுக் கவத்தை
பொருந்தினு மீசன்பற் றிலனே ௱௰௩.

ஈசனு வியற்று முலகைநா டிடுவோ
ரிறுதியஞ் ஞான்று ஞான
லேசமு முடைய நின்னைப்போல் பவரே
லெங்குவதாய் விசாரணை முகத்தா
லேசமாக் கொள்வர் பயன்றோ நினைக்கே
நிகழிரு தன்மையு முளவாம்
பாசமி லாம லறிதலே யொன்றும்
பண்புடன் றோற்றுவ தொன்றும் ௱௰௪

உன்முக மாகச்சமா தியையடைந்த
வுவப்புடன் பகிர்முகம் பெற்ற
தன்மையி னுலகம் வேறதாத் தோன்றத்
தானதி னுளளவினிலே
நன்மையி தெனவே நாடிட வருமே
னுழுவுநல் லறிவதா நிலையும்
வன்மையாம் பிறப்போ டிறப்புமென் மேலாய்
வந்துறு மஃதினு லுலகின் ௱௰௫

விளக்கமோ பிரம விளக்கமென் றோர்ந்தே
விளங்குத லவசிய நினைக்கே
துளக்கினோர்ப் பினுஞ்சந்தேகமோ சற்றுஞ்
சூழ்ந்திடா வகையதாய் மாயா
விளக்கமா மசத்து முதலிய வுலகை

விளம்புவன் கேட்டறி யென்னக்
களிக்குரல் லறிஞர் புகழுதற் குரிய
கடவுளை யன்பினு னிறைஞ்சி ௩௰௬

உலகையே பொருளெனக் கொண்ட மாணாக்கனுக்கு, அஃது அசத்தாதிகுண முடைய தெனவுணர்த்தல்.

அரியமேலை யசத்து முதலிய வைந்தை
யருளெனக்குருபரன் மொழிவா
னுரியது போலத் தோன்றிடும் பூத
வுலகமோ வுண்மையாய்ப் பார்க்குந்
திரிபிலா விடத்தி லாமையா லசத்தாஞ்
சிறிதுமே தனக்கொரு வறிவு
பரிவுட னென்று மிலாமையாற் சடமாம்
பண்புறு மின்பமே போல ௩௰௭

தோற்றியே யழிவ தாலது துக்கஞ்
சொருசதா யிருப்பது போலத்
தோற்றியே கெடுதலா லசித் தமுமாஞ்
சுயம்பிலா பின்னமே யமாய்ச்
சாற்றுதற் கிருத்த லஃதுகண் டமதாஞ்
சாதுவே பிரமசத் திதியி
லூற்றமா மாயா காரிய மதுதா
னுலகமா யுற்றதென் றறிவாய் ௩௰௮

மாயையிதெனலு மிதன் காரியமாகியவுலகமித்தை யெனலும்

அரியசற் குருவே மாயையி தெனவே
வருளென விலாமைதா னஃதோ
தெருளிலா தஃதே மாயையா மென்னச்
செப்புவன் மாணனு மினியோ
யுரியதில் லாத மாயையென்பதுதா

உலகமாங் காரிய மதனைப்
பரிவுட னெவண மியற்றின தஃதைப்
பகரென விறைஞ்சி நின்றனனே ௱௰௯

இலாமையே வடிவ மாயை யாய்வினிலே
யிலாதுபொய் யாகுமே யாறு
லிலாமையா மாயா காரிய வுலக
மெங்ஙன மெய்யதாய் நிகழும்
நிலாவுல கதுவும் பொய்யதா மிஃதி
னிண்மைய மீதென வுணர்ந்தே
குலாவிட வின்னு மதனையேயிங்ஙன்
கூறுவேங் குவிந்துநீ கேண்மோ ௱௨௰

உலகந்திருக்கு திரிசியமாய் விளங்குவதெனல்.

நாமமும் ரூபஞ் சத்துடன் சித்தா
னந்தமாய் விளங்கிடு முலக
நாமமும் ரூபந் திரிசியந் திருக்கோ
னணுகிடுஞ் சச்சிதா னந்தம்
காமரு பங்க ளொன்றுமற் றொன்றாய்
நண்ணியே மாறுத லடையு
நாமரூ பங்கள் போலமெஞ் ஞான
னந்தமோ மாறுத லடையா ௱௨௧

மாயைசுயமல வெனலும், அறிவே பிரமமெனலும்.

தோற்றமுஞ் சொன்மாத் திரமுமா மாயை
சோர்தலே யுறுதலி னாலு
மேற்றமாய் மாயை தன்னையே யறிய
வியல்புசற் றிலாமையி னாலுஞ்
சாற்றுமிம் மாயை கற்பனை யதனைச்

சார்வதி ஞானுமிவ் வுலகம்
போற்றிடும் பொருளீ தெவணமா மின்னும்
புகலுவேனீயதி வுறவே ௱௨௨
பஞ்சபூ தத்தை நியதிசெய் தகற்றிப்
பார்த்தபோ தொன்றுமே யிலதாந்
துஞ்சுத லானதி லாதெத்தோ வஃதே
சுயம்பிலா மாயையா லிதனை
மிஞ்சியே நின்று பார்க்கு நல் லறிவே
வித்தகப் பூரணப் பிரம
மெஞ்சலில் பிரமஞ் சச்சிதா னந்த
மென்பதாய் விளங்குவ தம்மா ௱௨௩

உலகஞ் சச்சிதானந்தமயமெனலையுவமைபூருவமாயுணர்த்தல்.

உலகமீ தென்னுந் துவித தோற்றத்தா
னுண்மையாய்ப் பார்ப்பவர் தமக்கே
யுலகமு முண்மை யாயின் துவித
முலகினுக் குள்ளதோ வுணரா
யுலகது துவித மிலாமையா னுலகு
முயர்சச்சி தானந்த மயமா
முலகமு நினது பேதமா நினைவி
னுற்றதை யுவமையா னுரைப்பேன் ௱௨௪
அந்தியிற் பழுதை தன்னிலே பாம்பு
மடைவுடன் றோற்றுந்தோற் றந்தான்
வந்தது பழுதை யினைமறந் தமையான்
மறதியோ பழுதையி லில்லை
தொந்தமா யுதித்த பாம்பினு மில்லை
தோற்றிய பழுதை யிற்பாம்பிற்
பிந்திய பாம்பிற் பழுதையு மிலையிப்
பேதமு நின்னிடத் ததுபோல் ௱௨௫

மாணுவறியாமையை நீயேயியற்றினை யெனல்.

தன்னுடை வடிவாம் பிரமத்தை மறந்த
தன்மையா லுலகம்வே ருக
வுன்னவே நின்ற நிம்மற தியுமோ
வுதித்தகா ரணமதை யுணரி
னின்னுடைச் சங்கற் பத்தினு னின்னி
னீயியற் றினையென வறிந்தாற்
றன்னிலே தன்னிற் சகத்துடன் மறதி
சாற்றுதற் கெங்ஙன மாமால் ௲உசு

அஞ்ஞானநோக்கிதெனலும் ஞானநோக்கிதெலும்.
வுலகஞ்சச்சிதானந்த வடிவமெனலும்.

நினதுவஞ் ஞான நோக்கினு லுல்காய்
நினைந்துபந் தத்தையே யடைந்தா
னினதுஞா னத்தாற் சித்ததா யோர்ந்தே
நீமுத்தி யடைகுத னெறியே
தனதெனும் வடிவிற் பந்தமுத் தியுந்தாஞ்
சாற்றுதற் கிலையஃ துணரிற்
றனதெனும் வடிவ மாகுமிவ் வுலகஞ்
சச்சிதா னந்தம தாமால். ௲உஎ

அபாவவளவையாலுலகிலையெனலும் உலகு பிரமமே யென
லும், பிரமநீயெனலும், உணர்த்தல்.

அருணிறை மாவாக் கியத்தையே மிக்க
வாதரவுடன் புகன் மறைதான்
றெருள்வளர் பொருட்டே யளவைக் ளெட்டாய்ச்
செப்பிய வவையி லொன்ருன
மருளிலா வபாவ வளவையா லிங்ஙன்

வழுத்துவேன் மாயையு முலகு
மிருளிலா தில்லை யபாவமு நான்கா
மினியதை யுரைத்திடக் கேண்மோ ௱௨௮

பிராகம் ப்ரத்தொம்ச மன்னியோன் னியமும்
பேசிடு மத்தியந் தமுமாம்
பிராகமோ வுலகஞ் சிருட்டி முன்னிலதாம்
பிரதொம்சஞ் சிருட்டிபின் னிலதா
மிராததா மன்னி யோன்னிய முலகோ
விடையிலை யத்தியந் தமுமோ
விராகமா முலகெப் போதுமில் லதுவா
மிருப்பதை யினியுரைத் திடுவேன். ௱௨௯

பிரமமே யுலக சிருட்டி முன்னுளதும்
பேதமி னேதியாய்ப் பார்க்கிற்
பிரமமே யுலக லயத்தின் பின்னுளதும்
பிரமமே யிடையினி லுளதும்
பிரமமெப் போது முள்ளதே யானாற்
பிரமமு நீயெனல் பிசகோ
பிரமமே யுளது சகத்ததமா யையினைப்
பேசுத லெவணமென் றறியே ௱௩௰

மாயை முதலியகற்பனை சொன்மாத்திரமெனல்.

மாயையு மவித்தை பிரகிரு தியுந்தான்
மயங்கபி மானம தாமா
நேயமா மிவைசண் மூன்றுமொன் றேயா
நிகழ்மறைவேறுவே றுகச்
சாயலா யுரைத்த தென்னெனிற் சீடர்
தகுதியை யுன்னியென் றுணர்வாய்

மாயையு மவித்தை பிரகிரு தியுந்தான்
வசனமாத் திரமதாய் முடியும் ௱௲௧

நினைவினிலுலகமும் உலகோபிரமமென்பதையு
முணர்த்தி மேல்சாமவாக்கியதத் பதமுரைத்தல்.

பொன்னினை யன்றிப் பூணிலைப் பூணைப்
பொன்விடா தடங்கின ததுபோல்
வுன்னினை வினிலே யுலகமா முலகோ
வுயர்சச்சி தானந்த பிரம
மன்னிய மிலாம லிருப்ப தென்றுணர்வா
யனகனே சாமவாக் கியத்திற்
பன்னிய தாந்தத் பதத்தினை யிங்ஙன்
பகருவே னென்னமா ணக்கன் ௱௲௨

நிறையுணர் வடிவே நிமலசற் குருவே
நித்தனே சுத்தநா யகனே
பொறையுறு மடியர் தமதெதி ருறிலோர
போதசொ ரூபந்தா னாது
முறமைபோ னினது சந்நிதிமாத் திரத்தான்
மூதுணர் வாதனு னறிதோ
மறைமுடி மாவாக்கியத்திற் றத்பதத்தை
மகிழ்ந்தரு ளெனவணங் கினனால் ௱௲௩

தத்பத,வாச்சிய, லக்ஷியமும், விடாதலக்கணையும்.

தேற்றுந்தத் பதமு மருத்தமு மிரண்டாய்ச்
சேர்ந்திடும்வாச்சிய மெனவுஞ்
சாற்றுநல் லக்ஷி யார்த்தம தெனவாஞ்
சமட்டியாஞ் சரீரமுன் றினையு
மேற்றதோர் சமட்டி யவத்தைமுன் றினையு

மியைந்தபி மானமே யடைந்தே
லூற்றம திலனு மானமா மீச
னுறுவன்வாச் சியமதை யுணரே ௱௩௪

ஈசனை தவத்தை சரீரமூன் றினையு
மிவை யிவை யெனப்பகுத் தறிந்தே
பாசமி லாமற் சாக்ஷிமாத் திரமாய்ப்
பார்த்திடும் பிரமம் லக்ஷியமா
நேசமா மிவையி லின்னுஞ்சந் தேக
நின்றெழுந் திடாவகை யிங்ஙன்
பேசுவேன் விடாத விலக்கணை யென்றான்
பெரியவற் குறியபெற் றியனே ௱௩௫

பூரண நிலையாம் புனிதனே யடியர்
போதநற் சொரு பமாய் விளங்கக்
காரண வடிவு கொண்டுவந் திசைக்குங்
காரணு விடாதலக் கணையை
யாரணம் போல வடியனுக் கரையா
யையனே யெனமலர்த் தாளைத்
தாரண மாகத் தாழ்ந்தன னெமையே
சார்ந்தருள் புரிந்தவ னிசைப்பான் ௱௩௬

சத்துடன் சித்தா னந்தம்பூரணமுஞ்
சாந்தமுன் சாக்ஷியு மேக
நித்திய நிமல நிசலநிஷ் களங்க
நிரஞ்சனந் தத்துவஞ் சோதி
சத்திய முதலா நாமமோ வனேகஞ்
சார்ந்திதை விடாதில குவதே
வத்துவாம் பிரமம் விடாதலக் கணையாம்
வளத்துட னுரைப்பதைக் கேண்மோ ௱௩௭

சோதனை, ஞாயம், பொருத்த, முகத்தால், அறிவாகிய
பிரம்மத்தை மகத்தினு மகத்தாய தரிசனையும்
தடத்தத்தி னருத்தமு முணர்த்தல்.

சுருதியோ டுத்தி யனுபவ மாகத்
தொடர்ந்து ப்ரம் மத்தையே யறித
னிருமல வடிவை மகத்தினு மகத்தாய்
நின்றதோர் தரிசனை யீதா
மருமையா யெவையும் பார்க்குந் த்ருஷ்டாவா
யமைந்தனீ தடத்தனும் பிரம
மொருமையோ டிதனை யோரென வுரைத்தா
னொழிவிலா னந்தமே வடிவோன். ௫௩அ

மாணனறிவே பிரமமெனத்தெளிந்தேனெனல்.

எனதுரு வாகு மெந்தையே பிரம
மென்பதா மறிவுநா னுனேன்
றினதுவாக் கியத்தாற் சற்றுஞ்சந் தேக
மிலையுரு வெனவணங் கினன்பின்
றனதுரு வானசொ ரூபமாம் படலஞ்
சாற்றுது மிறையுணர் வடிவா
மனகனே யிருந்து கேளென வுரைத்தா
னன்பர்த மன்புறு வோனே ௫௩ஆ

2-வது தடத்தபடலம்.

முற்றும்.

ஸ்ரீ சற்குருவேநமா:

# 3-வது சொரூப படலம்.

———(o)———

மாணவன் சொரூப நிலையையறி தற்பொருட்டு
வினவியதற்கு ஆரியன் விளம்பற் கிசைதல்.

ஆதியு மனாதி யில்லதுள் ளதுவு
மாகிய குருசிகா மணியே
நீதியா யினிமேற் சொரூபசற் படல
நிகழ்த்திடே யருளுதற் கிங்கன்
சோதியே நின்னை யலாதுவே றுளரோ
சுத்தா சுயம்புவே யென்னைப்
பாதமே பணிந்த பாலனை யன்பாற்
பார்த்துமேற் பகர்தன்மே யினனால் ௱௬௰

நினதுசொ ரூபஞ் சச்சிதானந்த மாதி
யெனலு மாணன் எவணமாவ னெனலும்.

நினது மெய் வடிவஞ் சச்சிதா னந்த
நித்தியம் பூரண மென்ன
வெனதுரு மெய்ஞ்ஞா னானந்த மாதி
யென்பதெவ் வணமெனச் சீடன்
வினவிச் சற்குருவி னடியிணை தொழவே
விளம்புசல் லருட்குரு முனியு
முனது மெய் வடிவாஞ் சத்துசித் தாதி
யுரைப்பதை யினியுணர்ந் திடுவாய் ௱௬௧

சச்சிதானந்த மாதியிலக்கணங்களீ தெனல்.

எவ்விடத் தழியா திருப்பதே சதுவே
யிவையுஞ் சத்தெனுங் குணமாகு

பெவற்றினு மழியா திருந்தறி வதுவே
யிணையுஞ்சித் தெனுங்குணமாகு
மெவற்றினு மழியா திருந்தறிந் திணைத
லிணையுமா னந்தமீ தாகு
மெவற்றினு மிருந்தோர்ந் தானந்த வொருமை
யிணையுநித் தியமென்ப தாமால் ௱௪௨

தானென விருந்தோர்ந் தானந்தவொருமை
சார்ந்தவற் றினுமிகச் செறிந்துந்
தானவை தம்மில் வெளியது போலச்
சற்றுப்பற் றின்மை பூரணமாந்
தானெனு முண்மைப் பொருளின் லக்ஷணமீ
தாமென விசைத்துமே னுரைப்பான்
றானெனு முண்மைப் பொருளினைப் போலச்
சாற்றுதற் கிருப்பதை யுணரே ௱௪௩

சத்துப்போலியும், வினவும், விடையும்.

மோனமே தானா யுற்றவன் னிலையை
மொழிவதற் கிலாமையா லிஃதே
ஞானவஞ் ஞான ரகிதமா மயலாய்
நாடிடு நாட்டம் போ லியதா
மானதாற் சத்து முதலிய போலி
யைந்தையு மிங்ஙன மறைவே
னீனமாம் போலிச் சத்தது மூன்று
மியல்விவ காரிக மெனவும் ௱௪௪

சொல்லுவன் பிராதி பாதிக மெனவுந்
துட்பர மார்த்திக மெனவுந்
தொல்லையார் கனவி னனவிலே சொல்லுந்
தோற்றன்மாத் திரமுமாய் விளங்கு

மெல்லையிற் றால முதலவாம் பொருள்க
ளிகழ்விவ காரிக சத்தாம்
வல்லையிற் றோற்றி யழிவதே யியல்பாய்
வந்துறுங் கணுக்கள வதனில் ௱௪௫

தோற்றன்மாத் திரமா யிருக்கலீ பார்க்குஞ்
சூக்கும வுடன்முதற் பொருள்க
ளேற்றமிற் பிராதி பாதிக சத்தா
மிருண்மய மாஞ் சுழுத் தியினி
லாற்றமாம் விருத்தி பொன்றுமே யின்றி
யுயாறி விருத்தலா லஃதே
சாற்றிய பாரமார்த்திக மாகுந்
தனையனே யுரைத்ததை யறியே ௱௪௬

தேடுவோர் தமது தேட்டமாய் விளங்குந்
தேவனே யெனவருட் குருவை
நாடிநின் றமலன் பதமல ரதனை
நயமுடன் றொழு திறைஞ் சியநற்
சீடனு முரைப்பான் முன்னையவிரண்டுஞ்
செப்பிய தொக்குமென் றறிந்தேன்
கூடிய பார மார்த்திக மதனைக்
கூறினீர் போலிய தெவனும் ௱௪௭

என்னவே வினவ விறையவ னிசைப்பா
னெழில்பெற விளங்குமச் சத்து
தின்னுடைச் சுபாவ நன்னிலை தனக்கு
னேர்மையி லயலதே யாகு
மன்னதா லஃதும் போலியென் றறைந்தா
மாதலி னையம தகறீ

பின்னைய சித்துப் போலிக ளன்னைப்
பிரித்துரைத் திடுதுநீ கேண்மோ ௱௪௮

சித்துப் போலியும், வினவும், விடையும்.

சிவனோ டீசன் சாக்ஷிய தாகச்
செப்புங்கூ டத்தனும் பிரம
மோவியம் போலப் போலியென் றுணர்வா
யுத்தமா வென்னமா ணவனு
மாவலோ டுரைப்பா னன்குமே போலி
யாவதெவ் வணமென விறைவ
னீவினு விடன்மிக் குயர்வுடைத் தேயா
கிகழத்துவ னோரென மொழிவான் ௱௪௯

சொல்லிய சீவ னீசுர னிவைக
டுவிதமாஞ் சாக்ஷியின் சாயை
யல்லதில் லதனுற் போலியென் றதனை
யறைதலி லையமே னென்ன
வில்லதாஞ் சீவனீசனைப் போலி
யென்பதோ வொக்குமென் றறிந்தேன்
வல்லகூடத்த பிரமசித் ததனை
வகுத்தது போலிய தெவனோ ௱௫௰

என்னநற் சீடன் வினவவே குருவா
மிறையவ னெழில்பெற விசைப்பான்
மன்னுகூ டத்த பிரமமா கிலைகண்
மருவிடு மகம்புற மாகுஞ்
சொன்னவின் னிலைகள் கற்பித மதனாற்
றுவிதமா நிலையெலாங் கழன்ற
தன்னிலை யதற்கிங் கென்னென வுரைப்பேன்
றக்கவா சீவனோ டீசன் ௱௫௧

என்னுமின் னிலைகள் பிரபகூடத்தற்
கெங்ஙனம் போலிபோ வதுபோன்
மன்னிடு மதனு லையம தகல்வாய்
மாணனே யினிசுகப் போலி
பன்னுவ னஃதோ யெட்டதாம் விடையம்
பஞ்ருநற் பிரமம் வாசனையும்
பின்னரு முக்ய நிசமுட னுன்மா
பேசுமத் துவிதம் வித்தையதே ௱௫௨

ஆனந்தப் போலியும் வினவும் விடையும்
விடையங்க ளியாவின் மூலநின் றுண்டாஞ்
சுகமதே விடையவா னந்த
மடையுநித் திரையி லவத்தைக ளிரண்டு
மகல்சுழுத் தியின்சுகம் பிரமந்
தொடையதா யெழுகித் திரைதெளி வினிலே
தோற்றிடும் பிரியவா சனையாங்
கடையுபே க்ஷயினி லெழுமதி சுகமே
சாண்டிநீ முக்கிய மாமால் ௱௫௩

உபாயயோ கத்தான் மனமடங் கினதென்
றுறுவதா லெழுசுக நிசமா
மபாயமாம் விடையங் களிலுளதாம் பிரிய
மானதென் றெழுவதான் மாவாஞ்
சுபாவமா யுலகி லுளதுதா னென்றே
தோன்றும் விவேகமத் துவித
மபாவமின் மாவாக் கியவிவேகத்தா
லடைசுகம் வித்தையா னந்தம் ௱௫௪

என்றருட் குருவு மிசைத்திட மாணா
னெந்தையே யானந்த மெட்டு

மென்றமே யிருப்ப தனுபவ மாக
விருத்தலா லிதனைப்போ லியதாய்
நின்றதென் றுரைத்த தெவணமா மென்ன
நிகழ்த்துவ னற்கு ரு முனியும்
பொன்றலி ற்று கியதிர திசையா
னந்தமோ போலிபோ லலவே ௫௫

ஆதலாற் போலி யானந்த மெட்டு
மடுத்தடுத் தெழுமுட னகலு
மோதுதா னதி ரதிசயா னந்த
மோர்சுகம் சுகப்பொருள் சுகிப்பா
னீதெலாம் பொருந்து மாதலா லெட்டா
மியைந்ததைப் போலியென் றுறைந்தா
நீதியா யினிமே னித்தியப் போலி
நிகழ்த்துவ னதைநீ யுணரே ௫௬

நித்தியப் போலி

தன்னையே யன்றி யுலகுயிர் பரத்தைச்
சாற்றுதற் கிலாமையி னானுந்
தன்னுடை சாயை யுலகுயிர் பரயாய்த்
தடித்ததிற் றனிலா தானுந்
தன்னுடை சாயை யபாவதான் கினையுஞ்
சார்வதி னானுமச் சாயை
தன்னையே போலி நித்திய மெனவே
தனித்துரைத் தனமென வறியே ௫௭

பூரணப்போலி பாகியாந்தரம்.

சொல்லுவன் போலிப் பூரண மூன்றுஞ்
சுயம்பிலாக் காலதே சத்தோ
டெல்லையாம் வத்து வெனும்பரிச் சேத

மிசையந்திடும் பாகியாந் தரமாய்த்
தொல்லையாம் பாகி யத்தினிற் காலஞ்
சூழ்ந்திடு மளவைக ளானும்
வல்லதோர் பருவத் துற்றது மற்றோர்
பருவமே மருவிடா தாலும் ருஅ

சாற்றியதோ வத்துவைக் காலஞ்
சார்வதில் லாமையாற் போலி
யேற்றதென் றுரைத்தாந் தேசபா கியமோ
வினியதே சத்தினில் வேறோர்
தோற்றமாந் தேசந் தோன்றிடா தாலுந்
தோன்றிய தேசமோ வத்துத்
தேற்றமா யாவு முருத்தா லதனைச்
செப்பினேன் போலிய தெனவே ருகூ

பாகிய மான வத்துவோ பலதாய்ப்
பார்ப்பதற் கிருத்தலி னானு
மாகுமீ தாகா வெனும்பொருள் விருப்போ
டகல் வெறுப் புறுதலி னானும்
யூகமா யிதனை வத்துப்போ லியதென்
றோதினே னிவணமாந் தரத்தே
யேகம தில்லாக் காலப்போ லியினை
யியம்புவன் கேளென மொழிவான் ருசூ0

உடனுடன் மாறி யெழுமவத் தைகளா
யுற்றதிற் சஞ்சன வாதி
யடருறு மூன்றி லொன்றிலே மற்றோர்
தோற்றமே யிலாததி னானு
மடருமவ் வவத்தை யாவுங்கா லத்தே
யடங்கியே நிற்பதி னானுந்

திடமிலாந் தாமாந் தேசவத் துவினைச்
சேர்ந்திடாக் காலம்போ லியதே ௱௯௧

அஞ்சலிற் போலி யாந்தர தேச
மதுதனை யறைதுநீ கேண்மோ
நெஞ்சுடன் கண்டம் லலாடமதாக
நிகழுமீ தொன்றின்மற் றதுதான்
வஞ்சமி லாதும் விளங்கிடா தாலு
மகிழுமிம் மூன்றுமோர் முகமா
யெஞ்சலி லாமற் றுலங்கிடா தாலு
மிமையிலித் தேசமோ வம்பா ௱௯௨

வத்துயா வினையும் வைத்திடா ததனால்
வகுத்தனன் போலிய தெனவே
யெத்துமாந் தாயாம் வத்துபோ லியினை
யியம்புவன் றாலருக் குமத்தோ
டொத்தகாரணமும் வத்துபோ லியதா
மோதிய சரீரமொன் றினிலே
பத்தியாய் மற்றோர் சரீரமென் பதுதான்
பற்றுத லிலாமையி னாலும் ௱௯௩

போலிகளை விசாரித்தாலாம் பயன்.

தோற்றலு மழித லாகிய வியல்பே
சோர்விலா திருத்தலி னாலு
மேற்றதென் றுனைத்தாம் வத்துப்போ லியினை
யென்னவே மைந்தனு முரைப்பான்
தூற்றிய போலி யதனைநான் றெரிந்தே
தொடர்வதென் னெனவவன் வினவ
போற்றுதற் சொரூப மாகிய தானுப்
பொருந்தின் மற் றதுமில தாமால் ௱௯௪

தானெனுஞ் சொரூப முரைத்தற் கியையா தெனல்.

தானெனுஞ் சொரூப மெத்தகைத் ததனைச்
சாற்றென மாணனும் வினவத்
தானெனுஞ் சொரூப மித்தகைத் தெனவே
சாற்றுதற் கஃதுரு மையினாற்
றானெனும் பொருளைத் தெரிவதின் பொருட்டே
தானலாப் போலிசத் தாதி
யீனமே யிகந்த நின்னைப்போல் பவர்க்கா
யிருத்திட மெய்ம்முத லியவாம் ௱௬௫

இலக்கண மதனை யிங்ஙனங் கற்பித்
திசைத்தனந் தானெனும் பொருளாய்
விலக்கமி லாம னிற்குன் னிலையில்
விரித்ததோர் சத்துசித் தாதி
யிலக்கண மதனா னில்லையென் றோர்வா
யிடப்பிய சத்துசித் தாதி
யிலக்கண மதனுக் கிலக்கியந் தானா
யிலகிடும் பொருளினை மாதோ ௱௬௬

கடபதி னானும் வாக்கியத் தானுங்
காணநற் சேட்டையி னானுந்
தொடர்புட னெங்ஙன் சுட்டிச்சொல் வதற்காந்
தூயநன் மாணனே யென்ன
வடிவதா யுரைத்தற் கியைந்திடா திலையை
மகிழ்வுட னெவணறி வலனென்
றடிதனைத் தொழுத சிறியனை நோக்கி
யறைவனா னந்தமே வடிவோன் ௱௬௭

னெனுஞ் சொரூப மீதெனச் சொல்லாமதற் சொல்லியும்
மாணாக்கன் கலக்கமுளதெனல்.

இதுவரை யுரைத்த மொழியெலா மேதா
லேற்றுப்பற் றற்றதா யிலகு
மதுவடி வாக நிற்பதே தானு
மாதலா லவணீ நிற்றி
யிதனையே பொருளாய்ச் சந்ததங் கொள்ளென்
றியம்பினன் மாணனு முரைப்பான்
பொதுநிலை தானே யென்பதை யின்னும்
பொருந்திலன் கலக்கம துளதே ௱சூஅ

கலக்கமகலுமாறு சிரவணமாதியுரைத்தல்

அய்யனே கலக்க மகற்றியே யாள்வை
யடிகடு வீறிலாப் பொருளாந்
துய்யனே யென்னத் தொழுதான் மாணன்
றுயரதை யகற்றிட வேண்டிப்
பையநின் றுரைப்பான் சவணமா தியினைப்
பகருவன் பாலனே கேண்மோ
வுய்யுமச் சவண மாதிக ளாந்தா
யுற்றதை முறையதா யுரைப்பேன் ௱சூகூ

சிரவணமாதி நாமமுபஙிதில் சிரவணம் சடுவிதஇலிங்கதாற்
பரியத்தால் விசாரிப்பதெனலும்.

சவணமு மனன நிதித்தியா சனமுஞ்
சமாதியு முத்தியு மெனவாஞ்
சவணமோ விருமூன் றிலிங்கதாற் பரியஞ்
சார்ந்திடு முபக்கிர மத்தோ
டவமிலா வுபசங் காரமப் யாச
மபூர்வதை பலமுட னின்னுங்

க்வருறு மருக்த வாதமுற் பத்தி
காட்டிய வழிகுழி யீதாம் ௱எ௰

உலகமாய்ச் சிருட்டி யாவதன் முன்ன
முளதுதா னென்னவோ ருதலே
சுலபம தானவு பக்கிர மமதாஞ்
சுட்டுமீ துலகினை முறையே
சலமினே தியின்றாற் கரைத்துமே நின்ற
தாகிய தாவென்னு நிலையே
வல்வுப சங்கா ரமதென லாகும்
வழுத்துபூ முன்பினுந் தானே ௱எக

ஆதலா லிரண்டு மோரிலிங் கமதா
மறைந்த கூடத்தனே பிரம
மோதிய பிரம மென்பதே தானென் -
றொழிவிலா துறுதலப் பாச
நேதியா மளவை யாவுமே கடந்த
நிலையதா மபூர்வதை யாகும்
பேதமி றுனு நிற்புழி யுயிர்கள்
பிரிவிரு ளுதலே பலமாம். ௱எ௨

தானெனும் பொருளே கிருத்திய மைந்தைத்
தனித்தியற் றியதல வவையிற்
றுனெனும் பொருளோ பற்றுசற் றில்லாத்
தன்மையே யருத்தவா தமுமாந்
தானெனும் பொருளை யன்றியே பாமுஞ்
சகமுடன் சிபுவனு மிலாதிற்
றுனெனும் பொருளாய் நிற்பதற் பத்தி
சார்ந்தது மனனநீ யுணரே, ௱எ௩

### மனனமும் நிதித்தியாசனமைவகையும்.

மனனமோ வனேக வான்ம பக்கத்தை
மாற்றியே கான்மபக் கத்தால்
வினவுநல் லுத்தியென்பதா நிதித்தி
யாசனம் விரிந்தயோ கத்தாற்
றினம்விடா தனுசந் தானமே புரித
றிகழுமிவ் யோகமந் திரமுந்
துனுபரி சப்பா வனையபா வனையுந்
தொன்மஹா யோகமீ தைந்தாம், ௱௭௪

ஓம்பிர ணவமா மாதிமந் திரத்தா
லுளமதின் விரிவொருக் கிடலே
நேமமதான மந்திர யோக
நெகிழ்மன வொருமையாய்ச் சுழினை
நீமமா மதனி லயமடைந் திடலே
நிகழ்ந்திடும் பரிசயோ கமதாஞ்
சோமனுதியநல் லவையவ பகற்றிச்
சோதிக்கு மவையவி தனிலே. ௱௭௫

மனமடங் கிடலே பாவயோ கமதா
மனமுதித் திடமொடுங் கிடலே
கனவபா வமதாம் யோகமீ தாகுங்
கனன்றெழு மனமுதித் தொடுங்கு
மினையதிற் சாக்ஷி யாகவே தானே
யிருப்பதி லிருத்தன்மா யோகந்
துனைவதாஞ் சவண மாதிமூன் றதனாற்
றுலைவதை யிங்ஙன மொழிவேன். ௱௭௬

அஞ்ஞானம், சந்தேகம், விபரீத, மீதாலகலுமெனல்

அன்னிய நாட்ட மானவஞ் ஞான
மகன்றிடுஞ் சவணத்தா லுளதி
லென்னுஞ் சந்தேக நன்மன னத்தா
லேகிடு மயலையே யுளதாய்
மன்னிடும் பேதநி தித்தியா சனத்தான்
மாய்ந்திடுஞ் சமாதியை யினிமேற்
பன்னுவங் கேளேன் றேதினன் ஞான
பாநுவாம் பரகுரு முனியே. ௱௭௭

சமாதியீதெனல்

அயலதா நாட்டம் பற்றுதல் விடுத
லன்றியுந் தனது நாட்டத்தின்
முயலுதல் விடுத லின்றியு நாட்ட
முயற்சியீ திரண்டுஞ்சங் கற்பச்
செயலதென் றுணர்ந்து மிவையிரண் டினுக்குஞ்
சீர்வினை முதலது தானே
யியன்மன முபசாந் தமதுவாய் நாளு
மிருத்தலே சமாதியென் றுணரே. ௱௭௮

அப்பியாசம். அனுபவம். ஆரூடமீதெனல்.

சிரவண மனனநி தித்தியா சனமாய்ச்
சேர்ந்தவிம் மூன்றுமே தனைத்தான்
றெரிதரும் பொருட்டே யப்பியா சிக்குந்
தெரிவதாந் தன்னையே தானே
யுரியதாய் நீங்கா தநுபவித்திடலே
யொப்பிலாச்சமாதிய தாகு
மரியதான் றானு வமைதலா ரூட
மருமறை வாக்கியந் தெரியே. ௱௭௯

சாக்ஷாத்காரமு மதன்றன்மையு மீதெனல்.

முத்தியின் றன்மை யிரண்டதாஞ் சீவன்
முத்தியும் விதேகமுத் தியுமா
முத்தியிற் சீவன் முத்தியென்பதுவே
முத்தியில் விதேகமுத் தியுமாம்
பத்தியாய்ப் பந்த மடைந்தனமென்னும்
பற்றபி மானசீவனுக்கே
வுற்றபி மான நீக்கமுத்தியினை
யுரைத்தனஞ் சீவன்முத் தியதாய். ௱அ௰

திரிவித காக்ஷி யதனின்பற் றறுத
றெரிவொளி விதேகமே யென்னச்
சுருதிகண் முத்தித் தன்மையை யிரண்டாய்ச்
சொற்றதை யிரண்டுமொன் றென்றே
விரித்துரைத் ததனை விளம்பென மாணன்
வினவிநின் றேத்திட வருளாற்
பரகுரு முனியும் பகர்ந்ததைப் பாலன்
பான்மையோ டிருந்துசா வுவனுல். ௱அ௧

விரியபிமான மகன்றிடத் துளதும்
விகசித காக்ஷிமுன் றதனிற்
செரிவதாம் பற்றிங் ககன்றிடத்துளதுந்
தெரிவெனுந் தானிருப்பதினு
லுரியதோர் சீவன் முத்தியே விதேக
முத்தியென் றுற்றதென் றுரைத்தாந்
தெரிவத்ற் கரிதா முத்தர்தந்தன்மை
செப்புதுங் கலக்க நன்ககல. ௱அ௨

விரியுல கதனிற் பின்வருஞ் சீவர்
விதேகமுத் தியினையே யடையக்

கருணையா லனுக்கிர கிப்பவன் மயலைக்
களைந்தசீ வன்முத்த னெனவுந்
திரிவிதக் சாக்ஷிப் பற்றகலிடத்தே
தெரிவெனுந் தானேதா னாகை
விருந்ததின் படிசும் மாவிருப்பவனே
யிணையிலா விதேகனா மம்மா. ௱௮௩

முத்தியிற் சீவன் முத்தியென் பதுவே
முத்தியில் விதேகமுத் தியுமாம்
முத்தியில் விதேகமுத்தியென் பதுவே
முத்தியிற் சீவன்முத் தியுமாம்
பத்தியாய் முத்தித் தன்மையை யிரண்டாய்ப்
பகர்ந்ததோ கிந்தனைக் குறித்தே
முத்தியோ விடுதி யென்பதா மொன்றே
மொழிவதை யின்னுநீ யுணரே. ௱௮௪

தானாகிய முத்தர்களுக்கு நான்கு நாமமுங் கற்பனையெனல்.

இவ்வித தன்மை யிரண்டையு மடைந்த
யிணையிலாப் பிரபெனு முத்தன்
றிவ்விய நாமநான் கடைந்ததனைச்
செப்புவன் பிரமவித் தெனவுந்
தவ்வலில் வரியான் வரன்வரிட் டனுமாய்ச்
சார்ந்தன விடையசு கதுக்கந்
திவ்வியமாக வாழ்ந்தவன் றனைப்போற்
றெரிதருந் தோற்றமும் பிறர்க்கே. ௱௮௫

உளத்திற்பற் றின்மையாயவனை
முரைத்தனன் பிரமவித் தெனவே
கிளத்துதலான விடையசு கதுக்கங்
கிஞ்சித்தாழ்ந் தவனைப்போற் பிறர்க்கே

யழுத்தமாந் தோற்ற முளத்திற் பற்றின்மை
யாயவன் நாமமே வாறு
மழைத்தவன் னியர்தம் வேண்டுகோட் குடன்பட்
டடைவிடை யசுகதுக்கத்தே. ௬அசு

ஏகதே சமதா யடைந்தவன் போல
வினைபிறர் தமக்குநற் றேற்றந்
தாகமி லுளத்திற் பற்றதின் மையுமாய்ச்
சார்ந்தவன் நாமமே வரியா
னாகமி லனியர் வேண்டுகோட் குடன்பட்
டுறுபவன் போலுமே விடைய
சோகமுஞ் சுகமு மேதுமில் லாமற்
றேய்ந்தவன் போலுமே யிலதாய். ௬அஎ

பிறருக்குத் தோற்ற முளத்திற் பற்றின்மை
பிரிவிலா திருப்பவன் நாம
மறிதரும் வரிட்ட னுகுமென் றிசைத்தா
மறைந்ததோர் நாமமின் னுன்கு
முறுவதாய் நாட்டம் பொருளெனக் கொண்டே
யுடையராம் பிறர்களுக்காக
வெறுமையாய் வேத முரைத்ததே யன்றி
மேவிடாத் தானே தானுக. ௬அஅ

ஒளிருநன் னிலைக்கு நாமங்க ளுன்கு
முறுதன்மை யாமலங்காரந்
தெளிவெனு மறிவுக் கில்லையென் றுணர்வாய்
செப்பிய விவைகளா னினக்கே
களைதருங் கலக்கங் களையுமா றின்னுங்
கழறுவேன் சாமவாக் கியத்தால்

வெளியதா யைக்ய மீதென வுரைப்பேன்
விகசித மாகநின் ஞேர்வாய். ௱அகூ

சாமவாக்கியத்த சிபதவாச்சிய லக்ஷியமும்,
விட்டுவிடா தவிலக்கணையும்.

மறைமுடி மாவாக்கியத்தசி பதத்தை
மகிழ்வுட னறைதுநீ கேண்மோ
நிறையசி பதத்தி னருத்தமு மிரண்டாய்
நிறைந்திடும் வாச்சிய மெனவுங்
குறைவுசற் றில்லா லக்ஷிய மெனவுங்
கூறிய சாக்ஷியாம் பிரம
மிறையதே யசியின் வாச்சியமாகு
மிருவகை சாக்ஷியி னைக்யம் ௱கூ௰

ஆனதே யசியின் லக்ஷியார்த் தமதா
மறைது நின் கலக்க நன் ககலத்
தினமில் விட்டுவிடாதலக் கணையோ
சிறப்பிலா வுடன்முத லியதை
யினமென் றதனை விட்டகூடத்த
னியைந்தும்பற் றின்மையாய் விடாத
மோனமாம் பிரம மிவையொரு மையதே
மொய் விட்டும்விடாத லக்கணையே. ௱கூக

சோதனை, ஞாய, பொருத்தமும் மாணுக்
கன்முனே சொரூபமானே னெனலும்.

சொல்லு நற்சுருதி யுத்தியும் பொருத்தஞ்
சூழ்ந்ததான் முனேயெல் லாமா
யல்லதா யொளிர்வ தாதலா லதனை
யறைந்தனஞ் சொரூபமே யென்ன
வல்லவி முனே யறிவெனுஞ்சொரூப

மானதா லேயம தகன்றேன்
வல்லவா நினது கருணையே கருணை
மாதவா வென துதித் துரைப்பான். ௱௬உ

மாணன் முத்தரையெவ்வா றுணர்வே னெனலும், சந்நியாச வேடம்பூண்டோர் யாவரு முத்தர்க ளோவென வினுதலும், அதற்கு விடையும்.

பின்னுமோர் சங்கை யுளதுளத் தினிலே
பிரிவிலாத் தானெனு நிலேயாய்
மன்னிய முத்தர் தம்மையெவ் வாறு
மகிழ்வுடன் றெரிவனு னவர்கள்
சந்நியா சிகளாய் வேடமே பூண்ட
ஜனங்களெல் லோருமே சொரூப
நன்னிலே யுற்றோ ராவரோ யிதனை
நாதனே யருளொடு நவில்வாய். ௱௬௩

நின்னினீ பேத நாட்டமே யுற்று
நிற்பதா னினக்கு வேறாக
வுன்னவே நின்ற பெத்தர் முத்தர்களை
யுற்றனே யுடன்மய மாக
நன்னிலே யபேத பேத நாட்டங்க
ணுடிடா விடத்திவை யிரண்டுஞ்
சொன்னதே யில்லே யாவுமாய்த் தானே
சுட்டிலா திருப்பதென் றுணரே. ௱௬௪

பெத்தர் முத்தர்க ளிதெனலும். ஆச்சிரமம் நான்கிநாமமும்.

அயலதா நாட்ட முற்றவன் பெத்த
னயலேயே விட்டவன் முத்தன்
செயலதிற் றுன்றுனு யிருப்பவனைத்
தெளிவினு னீதெரிந் திடுவா

யயலதாம் பிரமச் சரியமில் லறமு
மதனுடன் வானப்பி ரத்த
மியலதாஞ் சந்நி யாசமின் னன்கு
மிகழ்விலாச் சிரமமீ தாமால். ௱௬௫

## ஆச்சிரம மூன்றீதெனல்.

இந்தியம் யாவும் விடையத்தைப் பற்றா
திருப்பதே பிரமச்சா ரித்வம்
தொந்தமில் கமல னீரென வயலேத்
தோய்ந்துந் தோயாக்கிர ஹஸ்த
முந்தைய வயலே விட்டதில் வெறுப்பு
மூண்டுரை தன்னிடம் விறுப்புஞ்
சந்தத முளத்தி லுசாவுத றனையே
சாற்றினம் வானப்பி ரத்தம். ௱௬௬

## சந்நியாச மெதார்த்தமீ தெனலும். அயெதார்த்த மீதெனலும்.

இனிமையாய்ச் சந்நி யாசமோ வெதார்த்த
மென்பதே யொன்றதா மஃதோ
தனிமையாய்த் தான்று னிருப்பதுவாஞ்
சாற்றுவ னினியயெ தார்த்த
நனிமிகு சமைய சந்நியா சங்க
ளுட்டினி லளவில் பேதமதாங்
கனிவுடன் சிலதை யிங்ஙன மொழிவேங்
கழைத்திடா திருந்து நீ யுணரே. ௱௬௭

## சமைய சந்நியாசப் புதுமையீதென வுணர்த்தல்.

உலகினிற் சைவ சமயமே பூண்டோ
ருவமையிற் சந்நியா சமதோ
விலகிய வுருத்தி ராக்கமுந் தண்டு

மியற்றிய கமண்டலம் லங்கோ
டுலைவின் முண்டிதமு நான்றதோர் சடையு
முற்றசெங் காவிதோய் துகிலும்
பலமதாய்க் குமிழ்சேர் பாதுகையுடனே
பஸ்மமாம்வி பூதியுத் தளமும். ௱௯௮

நசிவுடை யுடலிற் புனையுமிவ் வேட
நனிமிகு முலகினர் தம்மை
சிசியனுக் குதர்க்கு முண்டியா லுடலைத்
தினம்வளர்ப் பதற்குமே கொண்ட
வுசிதமிற் கோலம் பலதிலே விரக்தி
யுற்றதோர் சந்நியா சந்தான்
வசிதலோ வெதனி லிஃதிலே யெதனை
வழுத்துவோஞ் சந்நியா சமதாய். ௱௯௯

மிக்கவை ணவத்தோர் சந்நியா சமதோ
விளங்குசெங் காவிதோய் துகிலுந்
தக்கவை யாகத் துவாதச நாமஞ்
சாத்தலு முத்திரா தானம்
புக்கில் வைகுதலுந் தண்டுகௌ பீனம்
புதியதோர் கமண்டலஞ் சென்னி
சிக்கமு மலது முண்டிதத் துடனே
சிறப்புறுந் துளபகாட் டத்தின். ௨௱

மணியுடன் கமல மணிபவித் திரமா
மாலையுங் குமிழ்சேர்பா துகையு
மணியுமிவ் வுடலிற் புனைந்ததோர் வேட
மயலதாஞ் சீடர்சேர்ந் தொருங்கே
பணிதலு முண்டி பலதினு லுடலைப்
பாதுகாத் திடுதலாங் கோலந்

தணிவுறும் பலதில் விரத்திசந் யாசம்
சார்ந்தது மெதனிலோ யிஃதில். உரு

சமையசந்நியாசப் புதுமை யகற்றி ஞானசந்நியா
சம்பத்துவித நாமமும், அதனை யடைந்தோர் நடைகளும்.

எதனையோ சந்நி யாசமென் றுரைப்போ
மிவிதமே சமையசன் யாசப்
புதுமைகளெல்லா மதத்தினு மூளதாம்
புகலுவன் ஞானசன் யாச
விதமதோ தசமாம் வித்வசன் யாசி
விவிதிஷா ஞானசன் யாசி
வதிதருங் கருமங் குடீசக மின்னு
மகிழுறும் பகூதக மம்சம். உருஉ

தெரிபர மாம்சந் தன்னொடு துரியா
தீதமும் பின்னவ தூதம்
சிரவணஞ் செய்தற் பொருட்டு சன்யாசஞ்
செய்வதே விவிதிஷா வாகுந்
தெரிவதா முத்தியடைவதி னிமித்தஞ்
செய்வதே வித்வ சந்யாசஞ்
சிரவண வலியா லீடணை மூன்றைச்
செகுத்தலே ஞானசன் யாசம். உருங

உலகதா மனிய நாட்டத்தாச் சிரம
முறுமுறை சந்நியா சந்தான்
விலகலில் கரும சந்நியா சமதாம்
விரியுல கதனிலூர் தோறும்

பலமுடஞ் செல்லுஞ் செயலதில் லவரே
பகர்குடீ சகசந்நி யாசி

பிலமதா யூரூர் நடந்து செல்பவரே
பெகூதக சந்நியா சிகளாம். உ௱௪

விரிசடை யுடையோ னாகியும் பிசை்ஷ
வேண்டியே யுண்பவ னம்ச
னொருவன்வந் தூட்ட வுண்பதுந் தன்கை
யுதவியு முணுததுங் காவி
பெருகதோய் துகில் தொன்று நற்பூதி
பூண்பவன் பரமஹம் சனுமாந்
திரிதரும் பசுவைப் போலவே வாயாற்
றின்பவன் றுரியதி தனுமாம். உ௱௫

பிறந்தமே னியனுய்த் திரிபவன் முனே
பேசுதற் கரியவ தூதன்
துரந்துளோ ராய பதின்மரூந் தேகஞ்
சூழ்ந்ததோ ரிந்தியங் கரண
மிறந்திடாப் பிராணன் முதலிய தான
விந்தமா னுடவுட லிருக்கத்
துறந்தன னென்வே காட்டுமிவ் வேடஞ்
சூட்டுவ தெதனுக்கோ வறியே. உ௱௬

அயலதா முடலி னுட்டமுற் றதினு
லணிந்தனர் பலவித வேடம்
செயலதொன் றில்லாத் தானேதா னுன்
தெரிவினுக் கென்னவே டந்தா
னியலலோ விரத்தி யானசன் யாச
மியையுமாச் சிரமநான் கினுமே
முயலிலா துளவா மென்பதை நீயே
மோகமி லாமனின் றறியே. உ௱௭

வேடமே பெரிதென் றெண்ணிடு மெண்ணம்
விராகம தாகுமோ புனையும்
வேடமும் விராக மொருங்குறி லுலகின்
மேன்மையாஞ் சிறப்புறு முயர்வாய்
நாடிய வேடத் தாற்பய னிலதா
நண்ணிய விரத்தியே யுறித்தாக்
கூடிய விரத்தி கரணனல் விருத்தி
குலைத்தலே சந்நியா சமதாம். உ௱அ

### எல்லா சீவர்களுஞ் சந்நியாசிகளே யெனல்.

ஆதலாற் றோற்ற மெழுவகைச் சீவ
ரமைந்தநற் சந்நியா சிகளே
யேதினு லென்னி லொவ்வொரு சீவர்க்
கியைந்திடா வத்துவு முளவா
மோதியவத்து விராகமோ கரணத்
தொப்பில [illegible] சேட்டையாம் விராக
நேதியாந் தானே யாகிடா ததனு
னிகழுயிர் சந்நியா சிகளே. உ௱கூ

### எல்லாசீவர்களும் ஞானிகளே யெனல்.

ஞானிக ளெனவே புகல்வதைக் குருவா
நாதனே யருளொடு நவில்வாய்
ஞானமே யடைந்தோர் ஞானியராவர்
ஞானமோ வறிவதென் பதுவாம்
ஞானமா மறிவ திலாததோ ருயிர்க
ளுட்டினி விலையுபி ரெல்லாம்
ஞானிக ளாகும் பேதமொன் றில்லை
நவின்றதை யுசாவிநீ யுணரே. உ௱ய

சிவரெல் லோரும் ஞானிகளானுற்
சிறுமையாம் பிறப்புட னிறப்பை
மேவுவ தெதனுக் கோவென வினவில்
விளங்கிய ஞானிக டமையே
மேவினு யுடலா யுடல்தோ ஞான
மாகுமோ மிக்கதோர் ஞானஞ்
சாதனும் பிறத்த லேற்றிடா வுடலோ
சனனமு மரணமு முறுமே. உ௱௰௧

உடலபி மானத் தாற்பிறப் பிறப்பா
முடலபி மானமே பந்த
முடலபி மானமே யஞ்ஞா னமதா
முடலது நீயலை யானு
லுடலது மெவ்வா றுயினெ னுடலோ
வுறுமபி மானம தாமோ
வுடலையு மபிமா னத்தையு முணரு
முணர்வதாஞ் சிவர்ஞா னிகளே. உ௱௰௨

மோனநான்கும். மோனாதீதமுமுணர்த்தல்.

மோனமீ தென்வே மொழிவதைக் குருவா
முதல்வனே யருளென வினவ
மோனமோ நான்கு வகையதாம் வாக்கு
மோனமுங் கரணமோ னத்தோ
டுனமாங் காட்ட மோனம்பின் னையதா
யுற்றதோர் சுழுத்திமோ னமுமா
மீனமின் மோனா தீதனுந் தானே
யியம்பிய மோனமோ வயலாம். உ௱௰௩

வாக்குமோன மீதெனல்.

வாக்குமோ னமதோ வசனநீக் கமதாம்
வாக்கைநீக் கிடுவதா லென்னும்

வாக்கதோ கன்ம விந்தியத் தொன்றும்
வாக்கில் வைராகமே கொண்டாற்
றுக்கிடு நான்கிந் தியத்தொழி றன்றாற்
சைகை காட்டிடுதலு மாமோ
வாக்கின்மூங் கையர்க்கும் வாக்குமோ னிகட்கும்
வழங்குத லொன்றென வறியே. உ௱௰௪

கரணமோனம்.

சொல்லிய கரண மோனமிந் தியத்தின்
றொழிறனை தடுத்தலாந் தினமும்
புல்லிய தான கனுக்கன வினிலே
பொருந்திய வந்தரேந் தியத்தா
லெல்லையிற் சஞ்சாரத்தினுக் கிங்ங
னென்னதான் செய்வதோ வறியேன்
வல்லதாங் காட்ட மோனமோ வினிமேல்
வழுத்துவ னிளைதயிங் குணரே. உ௱௰௫

காட்டமோனம்.

தறியைப்போ லுடலந் தனையசை வறவே
சார்ந்திவ ணிருத்தல் காட்டமதா
நெறியிலாக் காட்ட மோனத்தாற் பயனெ
னிற்குமக் காட்டந்தா னுமோ
குறியதாங் காட்டங் கன்மரம் பிணமுங்
கூறிடுஞ் சுவரினைப் போலாம்
பொறியெழுங் கரண விருத்தியோய் வில்லாப்
பொலிவினுக் கென்னசெய் வதுவோ உ௱௰௬

சுழுத்திமோனம்

வேறு

இனிமேற் சுழுத்தி மோனமதை
யியம்பு கின்றே னெழாநின்ற

நினைவு மறதி வடிவான
நீள்சங்கற் பத்தின் கண்ணே
யினிமையான விருப்பு வெறுப்
பெய்தா திலகு நிலைதானே
கனியுஞ் சுழுத்தி மோனமதாங்
களங்கமில்லா விவேக மிதே. உ௱௭எ

தன்னையின்ன தெனக் காட்டிச்
சாயாரூப சாக்ஷிய தாய்
மன்னும் விருத்தி ஞானமதோ
மாயு மயலை யகற்றிய பின்
சொன்ன விருத்தி ஞானமதே
சுட்டொன்றில் லாவிவேக மதாம்
பன்னுமோன மென்பதுவோ
பகையி லுபசாந் தமதாகும். உ௱௭அ

மாணுநினது சுவாநுபவ முணர்த்தெனவினவல்.

மோன மென்ப வுபசாந்த
மாகின் மோன நீத மதோ
வீன மில்லாத் தானே தா
னிதனிற் சிறிது மைய மிலை
ஞான வடிவா யிது வாறு
நண்ணி நீயே யுசா வினதா
லூனமில் லாதுய்த் துணர்ந்தே
யுற்ற சுவாநு பவ முணர்த்தே. உ௱௭௯

மாணுக்கன் சுவாநுபவமுணர்த்தல்.

என்ன மொழிந்த குரு பரனை
யிதைய கமல மலரின் மிசை

மன்னும் பேரன் பேவடி வாய்
வயங்கு மாணன் முக மலர்ச்சி
துன்னும் படி நற்றுண் மலரைத்
தொழுதே யுரைத்தற் கென்னையுள
தன்னே யன்னே நின்னருளின்
கறைய வெழுந்த ததிசயமே. ௨௱௨௰

ஆய்ந்தே யுணர்ந்த போதுணர்வா
மறிவை யன்றி யொன்றுமிலை
யாய்ந்தே யுணர்ந்த போதுணர்வா
மறிவை யன்றி யானுமிலை
யாய்ந்தே யுணர்ந்த போதுணர்வா
மறிவை யன்றி நீயுமிலை
யாய்ந்தே யுணந்த போதுணர்வா
மறிவே யறிவாய் நின்றதுவே. ௨௱௨௧

ஆய்ந்தே யுணர்ந்த போதுணர்வா
மறிவு தானே யெல்லாமா
யாய்ந்தே யுணர்ந்தபோதுணர்வா
மறிவுதா னல்லா ததுவாய்
யாய்ந்தே யுணர்ந்தபோதுணர்வா
மறிவு தானே தானுகி
யாய்ந்தே யுணர்ந்த போதிலெங்கு
மறிவே யறிவாய் நிறைந்ததுவே. ௨௨௨

ஆய்ந்தே யுணர்ந்தபோ தறிவே
யகில சீவபர மாகி
யாய்ந்தே யுணர்ந்தபோ துணர்வா
மறிவே யஃதல் லாதாகி
யாய்ந்தே யுணர்ந்த போதுணர்வா

மறிவே நீநான் றானகி
யாய்ந்தே யுணர்ந்த போதினிலே
யாய்த லுணர்த னிறையறிவே. உஉங

வேறு.

விடையங்க ளோந்துங் கடந்து மறிவே
விடையத்தை யிந்தியந் தொடர்முன்
றிடமதா மறிவே யிந்திய மதனைத்
திகழ்கர ணங்கடோ யாமுன்
னடர்ந்தது மறிவே கரணத்தைச் சீவ
னாட்டுமுன் னிற்பது மறிவே
விடைய மிந்திரியங் கரணமுஞ் சீவன்
விகசித மாதன்முன் னறிவே. உஉச

விடைய மிந்திரியங் கரணமுஞ் சீவன்
விகசித மானபின் னறிவே
விடையமிந் திரியங் கரணமுஞ் சீவன்
விகசிதத் திடையினு மறிவே
விடையமிந் திரியங் கரணமுஞ் சீவன்
விளக்கமெப் போதுமே யறிவே
விடையமிந் திரியங் கரணமுஞ் சீவன்
விளக்கமு மறிவிலா திலையே. உஉரு

அகண்டபூ ரணமாஞ் சச்சிதானந்த
மாகிய வறிவது நானே
யகன்றிடு மசத்து சடமுத லியதா
யமைந்தக லறிவது நானே
சுகஞ்சுகப் பொருளுஞ் சுகிப்பவன் றானுயச்
சுட்டிலா தறிவது நானே

பகர்ந்தகூ டத்த பிரமமு நானே
பான்மையீ தைக்கிய நானே. ௨௨௬

அறிவினை யன்றி யுலகுயிர் பரமு
மறிவினை யலாதவத் தைகளு
மறிவினை யன்றி யகமுடன் புறமு
மறிவினை யன்றியே யான்மா
வறிவினை யன்றிச் சகலகே வலமு
மறிவினை யன்றியே சுயமு
மறிவினை யன்றி யனுமகத் ததுவு
மறிவலா தொன்றுமீங் கிலையால். ௨௨௭

அறிவினை யன்றித் தூலசூக் குமமு
மறிவினை யன்றிக் காரணமு
மறிவினை யன்றிக் கோசமை வகையு
மறிவினை யன்றியே யயனு
மறிவினை யன்றி ஞானவஞ் ஞான
மறிவினை யன்றியே குணமு
மறிவினை யன்றி விருப்புடன் வெறுப்பு
மறிவலா தறிவதொன் றிலையே. ௨௨அ

ப்ரக்ஞையே யெல்லா வாசனாதிகளைப்
பிரிவிலா துளத்தினுற் கவர்ந்தும்
ப்ரக்ஞையோ வதனைச் சார்ந்திடா திருக்கும்
பேற்றினை யூன்றியே யுணரில்
ப்ரக்ஞையே யுளதாய் வாசனை யிலதாய்ப்
பெற்றதைப் பொய்யென னிசமே
ப்ரக்ஞையே யனைத்துங் காரணமாகும்
ப்ரக்ஞையே யொளிநிறை யறிவே. ௨௨௯

ப்ரக்ஞையே ஙன்ஞா பகச்சொரூ பமதும்
ப்ரக்ஞையே சாக்ஷியா னதுவும்
ப்ரக்ஞையே தான்ருஞயிருப் பதுவும்
ப்ரக்ஞையே களங்கமில் லதுவும்
ப்ரக்ஞையே சொல்லின் முடிவி னுஞ்சுயமாம்
ப்ரக்ஞையே சுருதியின் முடிவும்
ப்ரக்ஞையே நாட்ட மிரண்டதா யுணரும்
ப்ரக்ஞையே ப்ரக்ஞையா னதுவே. உ௲௰

ப்ரக்ஞையே படிப்பாம் படிக்குநற் படிப்போ
ப்ரக்ஞையே யிப்படிப் பில்லாப்
ப்ரக்ஞையே தெண்டப் படிப்பதா மேட்டின்
ப்ரக்ஞையே வரைசொரூ பமதாம்
ப்ரக்ஞையே படிப்பின் பயனது மாகும்
ப்ரக்ஞையே பயனதின் பலனும்
ப்ரக்ஞையோ யெவைக்கும் பயன் பயனுகும்
ப்ரக்ஞையே ஞப்திய தாமால். உ௲௧

ப்ரக்ஞையே ப்ரக்ஞா னம்பிர மமதாம்
ப்ரக்ஞையே யகம்பிர மாஸ்மி
ப்ரக்ஞையே தத்வ மசிமகா வாக்யம்
ப்ரக்ஞையே யதர்வணத் தொளிரும்
ப்ரக்ஞையே யயமான் மாபிர மமதாம்
ப்ரக்ஞையே வாக்கியப் பதமும்
ப்ரக்ஞையே வாக்கியப்பதத் தருத்தம்
ப்ரக்ஞையே ப்ரக்ஞையி னொளியே. உ௲௨

ப்ரக்ஞையே தான்ரு ஞய்விளங் குவதும்
ப்ரக்ஞையே பாகியத் துலகாய்

ப்ரக்ஞையே யயலி லாந்தரத் துணர்வாய்ப்
ப்ரக்ஞையே யொளிர்வதுந் தானுய்ப்
ப்ரக்ஞையே யேகந் துவிதசுட் டில்லாப்
ப்ரக்ஞையே தானென லுண்மை
ப்ரக்ஞையே சஹிதம் ரஹிதமு மில்லாப்
ப்ரக்ஞையே ப்ராந்தியில் லறிவே. ௨௬௬

ப்ரக்ஞையே தானுந் தன்னையே தானே
ப்ரக்ஞையாற் றனுணர் வதுவும்
ப்ரக்ஞையே தானுந் தன்னைமற் றோர்தான்
ப்ரக்ஞையா லோருதன் மயலே
ப்ரக்ஞையே தானுந் தன்னையே தானும்
ப்ரக்ஞையாங் குறியுப சாந்தம்
ப்ரக்ஞையே தானுந் தன்னையே தானும்
ப்ரக்ஞையே ப்ரக்ஞையா மறிவே. ௨௬௭

## வேறு.

தானேதா னுயொளிர் வதனைச்
சார முயற்சி வேண்டாவே
தானேதா னுயொளிர் வதனைச்
சார முயற்சி செய்தன் மயல்
தானேதா னல்லா ததுவாய்ச்
சார்ந்த வாசனுதி களைத்
தானே தானுதற் பொருட்டே
சதித்தன் முயற்சி வேண்டியதே. ௨௬௫
தானே தானல் லாதது வாய்ச்
சார்ந்த வாச னுதியறில்
தானே தானு யொளி நிறைந்த
சாந்த பதமே தானுண்மை

தானே தானா மறிவதனைத்
தள்ளிக் காட்டற் கொன்றிலதாற்
றானே தானாந் தெய்வமதோ
சாரு முயற்சியிலா தறிவே. உ௩௬

தானே தானா தற்பொருட்டே
சாரு முயற்சி யேனென்னிற்
றானே தானல்லா ததுவாய்ச்
சார்ந்த வாசனாதிகளைத்
தானே தானாய்க் கொண்டதனாற்
றனைதன் முயற்சி வேண்டியதாந்
தானே யயலாக் கொள்ளா தேற்
றனைதன் முயற்சி வேண்டிலதே. உ௩௭

அறிவோ சொன்மாத் திரமுமல
வறிவோ நம்பிக் கையு மலவே
யறிவோ வொன்றாற் செய்வதல
வறிவோ வதனா லன்றி மற்றோ
ரறிவா லறியப் படுவதல
வறிவோ வறிவாங் கண்ணினுக்கே
யறிவோ பிரத்தியக்ஷமதா
மறிவே யறிவாந் தான்றானே. உ௩௮

## வேறு.

இனிமைசற் றில்லா வாசனா திகளை
யிகுத்திட வுணர்வதே வடிவாய்த்
தனிமையாய்த் தான்றா னாகவே யொளிருஞ்
சற்குரு தன்னையே சாரா
மனிதர்கள் ஞானம் வேண்டியே முயலு
மாக்ஷிமை யமங்கலி மதலை

நனியுட னடைய விரதமே பூண்ட
நட்பினைப் போனகை யாமல். உகூ

இந்தநன் னிலையா நிலையலா நிலையை
யியம்பினை சைகையாற் புதிதாய்
வந்தது மல்லவ ராதது மல்ல
வந்துபோ னதுவோ சங் கற்பஞ்
சொந்த மாய்ச் சுயமா யிருக்குமோ ரறிவைச்
சுட்டியிங் கெவணநா னுரைப்பேன்
சிந்தைதான் மகிழச் செய்தநின் றனக்கே
செய்கைமா றிவணமொன் றிலையே. உசம

ஆசிரிய ராசியருளல்.

எனவிவ ணிறைஞ்சி யேத்தியே நின்ற
வினியமா ணாக்கனை யன்பாற்
றனதெனும் போதப் பொருளைப்பூ ரணமாய்ச்
சார்ந்தநீ விடாதில குவதே
முனமெனக் கிவண மீந்தகை மாறு
முறுமறைத் துணிபுமீ தேயாந்
தினந்தினந் தானாய்த் தெளிந்தவுத் தமர்தந்
தெரிவதா மனுபவ மீதே. உசக

மாணாக்கன் சகசசொரூபமே தானாகி பரசாக்ஷி
யாய் விளங்கல்.

என்ன வென் போல்வார் தமக்கருள்புரிய
வேகினன் ஞானவா சிரியன்
சொன்னநன் னிலையைச் சகசமாய் நாளுஞ்
சுட்டிலா வடிவமே வடிவாய்
நன்னல மெல்லா மடைந்தமா ணவனு
நகைமுக மலர்ச்சியோ டுளமோ

பன்னு தற் கியைபா வுவகைடாஞ் சாந்தி
பகம்பர சாந்தியா யினவே. உசஉ

சாமவே தத்திற் சாற்றும்வாக் கியந்தான்
சார்ந்தமுப் பதமு மிந்நூற்கே
நாமமூன் றிலக்கணப் பட லத்தா
ஞட்டிரு நூற்று நாற்பான் மூன்
றுமிதை ஞான குருவின் சந்நிதியை
யடுத்திருந் தோர்முறை யாயிற்
றுமலா தகற்றித் தாமேதா மாகச்
சாருவ துண்மையி துண்மை. உசங

## வேறு.

தவப் பேற்றினை வியந்து புகழ்தல்.
நாராயண முதன்மேவுறு நதிசூழல கதனி
னல்வாழ்வுடன் வாழுஞ்சுக நத்தும்பிது ராயர்
நாராயண சாமியென நாமமகிழ்ந் திந்து
நட்பாயிவ ணழைத்தார்கள் சொன் னயத்தாற்பொருள்
நாராயண முதலாகிய நாலெட்டுப நிடத [பொருளாய்
நவிலு முடிப் பொருளாகிய நானனெனு மறிவை
நாராயண வடிவாம்ராம நாதன்குரு பரன்று
ஞடும் படி செய்ததவ நலமே வாஆ ழியவே. உசச

சொரூபபடலம்
முற்றும்.

---

வேதாந்தலக்ஷணத் திரைய விளக்கம்,
முற்றிற்று.
ஸ்ரீ சந்த்ரநவேநமஃ

---

# பரிசோதனப் பத்திரம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 23 | ,, | 5 | நேதியால் கற்றல் | நேதியாலகற்றல் |
| 25 | 53 | 3 | கரரணங் | க்ரணங் |
| 29 | 64 | 1 | பிரரண | பிராண |
| ,, | ,, | 8 | விளமபு | விளம்பு |
| 36 | 87 | 7 | சாக்கிரமரம் | சாக்கிரமாம் |
| 49 | ,, | 11 | நோக்கீதெலும் | நோக்கீதெனலும் |
| 60 | 161 | 3 | லொரன்றிலே | லொன்றிலே |
| 61 | ,, | 20 | விசாரித்தாலாம் | விசாரித்ததாலாம் |
| 62 | 165 | 3 | சரற்றென | சாற்றென |
| ,, | ,, | ,, | மரணனு | மாணனு |
| 63 | ,, | 2 | னெனுஞ் | தானெனுஞ் |
| ,, | ,, | ,, | சொல்லாமதற் | சொல்லாமற் |
| ,, | ,, | 21 | பஃதில் | மஃதில் |
| ,, | 170 | 2 | சமரதி | சமாதி |
| 64 | 170 | 1 | க்வருறு | கவருறு |
| ,, | 173 | 6 | சீபுவனு | சீவனு |
| 66 | 177 | 7 | கேளேன் | கேளென் |
| 74 | 204 | 5 | பலமுடஞ | பலமுடன் |
| 80 | 221 | 7 | யுணாந்த | யுணார்ந்த |

# விளம்பரம்.

---

இதனடியிற் கண்ட புஸ்தகங்கள் விருதுபட்டி-
பா. மு, நாராயணசாமி நாயுடு அவர்களிடத்திலும் இரா
மலிங்கக் குருக்கள் அவர்களிடத்திலும் பெற்றுக்கொ
ள்ளலாம்.

வேதாந்த லட்சணத்திரைய விளக்கம்.
ஷை பிரமாணட்டக விளக்கம்.
இராமதேசிக மாலை.
பெரிய உவமான சங்கிரகம்.